வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 24.05.2026 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 138 பக்கங்கள் : 16




முள்ளிவாய்க்கால் நினைவு பேரணி;

## வீதி விதிமுறை மீறினர் என முல்லைத்தீவில் மூவர் கைது!

முல்லைத்தீவு, மே. 24

கடந்த மே 18 ஆம் திகதி இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை ஒட்டி, போக்குவரத்து விதிமுறைகளை மீறி பொது வீதியில் மோட்டார் சைக்கிள் பேரணி நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு தலைக்கவசம் அணியாமல்

15

## நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்ய இடமளியோம்!

### எல்லே குணவன்ஸ தேரர் எச்சரிக்கை

கொழும்பு, மே. 24


டொலர் மற்றும் யூரோவின் மதிப்பு உயர்வதைக் காரணம் காட்டி நாட்டின் தேசிய சொத்துக்களை துண்டு துண்டாக விற்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என எல்லே குணவன்ஸ தேரர் தெரிவித்தார்.

இலங்கையின் 54ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க

15

# ஜனாதிபதியுடன் சஜித் தொலைபேசியில் பேச்சு!

### சர்வகட்சி மாநாட்டை கூட்டுவது குறித்து அவதானம்



கொழும்பு, மே. 24

பொருளாதார நெருக்கடி குறித்து கலந்துரையாட சர்வகட்சி மாநாட்டை கூட்டுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை தொலைபேசி உரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு இடையில் கடந்த வியாழக்கிழமை இரவு விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி

15

## 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் நான் உறுதி!

### கனேடிய தூதுவரிடம் கூறினார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, மே. 24

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தனது உறுதியான அரசியல் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை - கனடா ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் பல்வேறு துறைகள்

15

## பொருளாதார நெருக்கடிநிலை; அவசர விவாதம் நடத்துங்கள்!

### எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு, மே. 24

நாட்டில் தற்போது நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமை குறித்து விவாதிப்பதற்காக, அவசர பாராளுமன்ற விவாதம் ஒன்றை நடத்துமாறு எதிர்க்கட்சியின் அரசியல் கட்சிகள் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

சபாநாயகருக்கும் எதிர்க்கட்சியின் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன் தினம் பிற்பகல் பாராளுமன்ற வளாகத்தில் விசேட கலந்துரையாடல்

15

## நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலை 27,000இற்கும் அதிகமானோர் பாதிப்பு

### ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே. 24

நாடு முழுவதும் தென்மேற்கு பருவக்காற்று படிப்படியாக நிலைபெற்று வருவதன் காரணமாக ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக, நேற்று மாலை 6 மணி வரையான காலப்பகுதியில் 6 மாவட்டங்களில் 6,907 குடும்பங்களைச் சேர்ந்த 27,419 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்த நிலைமை காரணமாக

15

## நான் திங்கள் கைதாகலாம்!

### விமல் வீரவன்ஸ பரபரப்பு செவ்வி



கொழும்பு, மே. 24

திங்கட்கிழமை (நாளை) தன்னை கைது செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும் அரசியல் நேர்காணலில்

15

## வெளிவிவகார அமைச்சருடன் அமெ. இராஜதந்திரிகள் பேச்சு

கொழும்பு, மே. 24

அமெரிக்கா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் ஆழமாக வலுப்படுத்துவது குறித்து வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் முதன்மைப் பிரதி உதவிச் செயலாளர்

15



## இம்முறை மீண்டும் வீழ்ந்தால் நாடு மீள்வது சாத்தியமற்றது!

### விஜேதாஸ ராஜபக்ஷ எச்சரிக்கை

கொழும்பு, மே. 24

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் பலவீனப்படுத்தப்பட்டதன் காரணமாகவே, நிர்வாக அறிவு மற்றும் அரசியல் தெளிவற்ற குழுக்களிடம் நாட்டின் அதிகாரம் செல்லும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இம்முறை நாடு மீண்டும் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்தால் அதிலிருந்து மீள்வது சாத்தியமற்றது. அரச அதிகாரத்தைக்

15

## எந்த முறையாயினும் மாகாண தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு தயார்நிலை!

கொழும்பு, மே. 24

பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் எந்தவொரு தேர்தல் முறையின் கீழும் மாகாண சபைத்தேர்தல்களை நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மாகாண சபைத்தேர்தல்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் அதிகாரிகளும் கூடியிருந்தபோதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னிலைக்கு அழைக்கப்பட்டிருந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளும், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதில் உள்ள சட்ட ரீதியான தடைகள் மற்றும் நடைமுறைச்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உயிர்மாய்ப்பு மரணங்கள் 70 வீதம் குறைவு!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்



கொழும்பு, மே. 24

1990 இல் அதிக நச்சுத் தன்மை கொண்ட பூச்சிகொல்லிகளுக்கு உகந்த முறையில் தடை விதிக்கப்பட்டதிலிருந்து இலங்கையின் உயிர்மாய்ப்பு மரணங்களின் விகிதம் சுமார் 70 வீதம் குறைந்துள்ளது என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்து நாடுகளும் தங்களின் உயிர்மாய்ப்பு தடுப்பு உத்திகளில் பூச்சிகொல்லி கட்டுப்பாடுகளைச் சேர்க்க வேண்டும் என்றும் அவர் முன்மொழிந்தார்.

சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் 79ஆவது உலக சுகாதார மாநாட்டின் ஒரு பகுதியாக, "பூச்சிகொல்லிகளால் ஏற்படும் உயிர்மாய்ப்புகளைத் தடுத்தல்" என்ற தலைப்பிலான சிறப்பு அமர்வில் பங்கேற்ற போது அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

16ஆம் திகதி தொடங்கிய 79ஆவது உலக சுகாதாரப் நேற்று வரை தொடர்ந்தது. இதில், 194 நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள், தூதுவர்கள், பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பார்வையாளர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த அமர்வை இலங்கை, கயானா, கென்யா, நைஜீரியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன. மேலும், உலக சுகாதார அமைப்பு, ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் உயிர்மாய்ப்பு மரணங்களை தடுப்புக்கான சர்வதேச சங்கம் ஆகியவையும் இதற்கு அனுசரணை வழங்குகின்றன.

1990ஆம் ஆண்டு முதல், அதிக நச்சுத்தன்மை கொண்ட பூச்சிக்கொல்லிகளை உகந்த முறையில் தடை செய்ததன் மூலம் நாட்டில் உயிர்மாய்ப்புள் சுமார் 70 வீதம் குறைந்துள்ளதாகவும், இதுவே சிறந்த ஆதார அடிப்படையிலான சிறந்த விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உயிர்மாய்ப்பு மரணங்களை தடுக்க பூச்சிகொல்லிகளைக் கட்டுப்படுத்துவது மட்டும் போதாது என்றும், சமூக அடிப்படையிலான சுகாதார சேவைகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும், இலங்கை தற்போது ஆரம்ப சுகாதாரப் சேவையை வலுப்படுத்துவதன் மூலம் இதைச் செய்து வருகின்றது என்றும் அவர் கூறினார். (அ)

# பிராந்திய மையமாக மாறவுள்ள மத்தள மகிந்த விமான நிலையம்!

## சர்வதேச முதலீடுகளுடன் அபிவிருத்தி

கொழும்பு, மே. 24

மத்தள மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை சர்வதேச தராதரத்துக்கு ஏற்ப அபிவிருத்தி செய்வதற்கான பூர்வாங்க கலந்துரையாடல் நேற்று மத்தள விமான நிலைய வளாகத்தில் நடைபெற்றது. விமான நிலையத்தின் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கோரப்பட்டுள்ள விருப்பப் பிரகடன வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக, இந்த முன்மொழிவுக்கு முந்தைய சந்திப்பு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் பலர் கலந்துகொண்டு, விமான நிலையத்தை வர்த்தக ரீதியாக இலாபகரமானதாக மாற்றுவது குறித்த தங்களது ஆலோசனைகளையும் வினாக்களையும் முன்வைத்தனர். இதன்போது, முதலீட்டாளர்களின் கேள்விகளுக்கு அதிகாரிகளால் தெளிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இது குறித்து கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு,

"இலங்கையின் புவியியல் ரீதியான மூலோபாய அமைவிடத்தைப் பயன்படுத்தி, மத்தள விமான நிலையத்தை ஒரு பிராந்திய விமான போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கான முழுமையான சாத்தியக்கூறுகள் உள்ளன. நவீன காலத்து விமான நிலையம் என்பது வெறும் பயணியர் போக்குவரத்தோடு நின்றுவிடாமல், முதலீடுகள், புதிய வேலைவாய்ப்புகள் மற்றும் பிராந்திய பொருளாதாரத்தின் மையப்புள்ளியாக விளங்க வேண்டும் என்பதே எமது இலக்காகும்-என்றார்.

கடந்த கால சவால்களை முறியடித்து, முறையான பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை புதிய அரசாங்கம் உருவாக்கியுள்ளதன் காரணமாகவே, இம்முறை சர்வதேச முதலீட்டாளர்களிடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# கடற்கரையில் மனிதத் தலை!

கொழும்பு, மே. 24

அளுத்கம, மொரகல்ல கடற்கரையில் உள்ள முன்னணி சுற்றுலா விடுதி ஒன்றின் பின்புறக் கடற்கரையில் கரை ஒதுங்கிய நிலையில், ஆண் ஒருவரின் உடலிலிருந்து துண்டிக்கப்பட்ட தலை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

அளுத்கம பொலிஸாருக்கு நேற்றுக் காலை கிடைத்த தொலைபேசி அழைப்புக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே குறித்த மனிதத் தலை மீட்கப்பட்டுள்ளது.

இது ஒரு ஆணின் தலை என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரது அடையாளம் குறித்த எந்தவொரு தகவலும் இதுவரை வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு திவுலப்பிட்டியவில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 24

நாட்டில் நிலவும் அனர்த்த நிலைமையினால் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய நபர் ஒருவர் வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டதில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் பல பாகங்களிலும் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாகப் பல்வேறு பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் போக்குவரத்துத் தடைகளும் விமானத் திசை திருப்பல்களும் ஏற்பட்டுள்ளதாகப் பேரிடர் முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மற்றும் அவிசாவளை பிரதான வீதியின் புவக்பிட்டிய தும்மோதர மற்றும் சீதாவக்க போன்ற பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் அவ்வீதியூடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

அத்துடன் தெல்கொட கம்பஹா மற்றும் திவுலபிட்டிய ஆகிய பகுதிகளில் உள்ள பல உட்புற வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

களனி கங்கையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதன் காரணமாக ஹன்வெல்ல சீதாவக்க தொம்பே கடுவெல கொலன்னாவை மற்றும் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளுக்கு அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் நீர்ப்பாசனத் திணைக்களம் சிறு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)

# இணைய நிதி மோசடிகள் பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, மே. 24

சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்கள் ஊடாக இடம்பெறும் நிதி மோசடிகள் குறித்து பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரெலிகிராம், வட்ஸ்அப் உள்ளிட்ட சமூக ஊடகங்களை பயன்படுத்தி போலி லொத்தர், உடனடி கடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வி வாய்ப்புகள் எனக் கூறி மோசடிகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிமுகமில்லாத இணைப்புகளை கிளிக் செய்வது, பலவீனமான கடவுச்சொற்களை பயன்படுத்துவது மற்றும் தனிப்பட்ட வங்கித் தகவல்களை பகிர்வது போன்றவற்றை தவிர்க்குமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், சந்தேகத்துக்கிடமான சம்பவங்களை உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




# நுவரெலியாவில் அடர் பனிமூட்டம்

கொழும்பு, மே. 24

நுவரெலியாவில் பல்வேறு இடங்களில் நேற்று பிற்பகல் நேரத்தில் கடும் மூடுபனி நிலவியது. குறிப்பாக எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு வீதிகளில் பனிமூட்டம் நிலவியுள்ளது. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனமழை மற்றும் நுவரெலியா பிரதான நகரில் மிதமான மழை இடைக்கிடையே கொட்டித் தீர்த்து வருகின்றது.

இதில் நுவரெலியா நகருக்கு உள் நுழையும் பிரதான வீதிகள் அனைத்திலுமே கடுமையான பனிமூட்டம் நிலவி வருகின்றது. இதில் நுவரெலியா - கண்டி மற்றும் நுவரெலியா - ஹற்றன் வீதிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

கடுமையான பனிமூட்டத்துடன் சேர்ந்து கடும் குளிரும் நிலவி வருவதால் பொது மக்கள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

# முந்தல் கடற்கரையோர அந்தோனியார் சிற்றாலய பகுதிக்கு அரச அதிபர் விஜயம்

மன்னார், மே. 24

மன்னார் மாவட்டத்தின் முந்தல் கடற்கரையோர பகுதியில் அமைந்துள்ள அந்தோனியார் சிற்றாலய பகுதிக்கு நேற்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் விஜயம் மேற்கொண்டனர்.

மன்னார் பள்ளிமுனை கடற்கரையில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் கடல் தொலைவில் அமைந்துள்ள, முந்தல் கடற்கரையோரப் பகுதி அந்தோனியார் சிற்றாலயம், கடந்த வருடம் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாக சேதமடைந்தது.

பள்ளிமுனை உள்ளடங்களாக முந்தல் அந்தோனியார் சிற்றாலய பகுதியூடாக தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள், குறித்த ஆலயத்தை தரிசித்து விட்டு செல்வது வழக்கம்.

அந்தோனியார் ஆலயம், பள்ளிமுனை புனித லூசியா ஆலய நிர்வாகத்தின் கீழ் உள்ளமையால், பள்ளிமுனை லூசியா ஆலய அருட்பணிச் சபையினர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.

அதற்கமைய அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் பிரதேச செயலாளர் கே.காந்தீபன், மன்னார் நகர சபை முதல்வர் டானியல் வசந்தன், நகர சபை உறுப்பினர்களான சபா மைக்கல் கொலின், ரஜனி பிகிராடோ மற்றும் பள்ளிமுனை பங்குத்தந்தை, பள்ளிமுனை புனித லூசியா ஆலய நிர்வாக பிரதிநிதிகள், பள்ளிமுனை மக்கள், பள்ளிமுனை கடற்கரையில் இருந்து படகு மூலம் பயணித்து, அந்தோனியார் சிற்றாலயத்தை சென்றடைந்தனர்.

சேதமடைந்துள்ள சிற்றாலயத்தை பார்வையிட்ட குழுவினர், ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாக கலந்துரையாடினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கரையோர பகுதிகளை சுத்தப்படுத்தும் விசேட வேலைத்திட்டம் நேற்று யாழில்!

## வடக்கு மாகாண ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம், மே. 24

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் எண்ணக்கருவுக்கு அமைவாக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட 'தூய்மையான இலங்கை' வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டமாக, 'அழகான கரையோரம் - கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலம்' எனும் தொனிப்பொருளிலான கரையோரப் பகுதிகளைச் சுத்தப்படுத்தும் விசேட வேலைத்திட்டத்தின், யாழ்ப்பாண மாவட்டத்துக்கான கரையோரச் சுத்திகரிப்பு வேலைத்திட்டத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் நேற்று சனிக்கிழமை காலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.



இலங்கை இராணுவத் தளபதியின் வழிகாட்டலின் கீழ், அரச நிறுவனங்களின் ஆதரவுடன் நாடு முழுவதும் 256 கரையோரச் சுத்திகரிப்பு வேலைத் திட்டங்கள் இலங்கை இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்கு இணையாக, யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரங்களை உள்ளடக்கிய வகையில் 30 சுத்திகரிப்பு வேலைத்திட்டங்கள் நேற்றைய தினம் நடைமுறைப்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த நவரத்னவின் வழிகாட்டலிலும், 51ஆவது காலாட்படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரிஸ்வி ராசிக்கின் மேற்பார்வையிலும், 512ஆவது காலாட்படைப் பிரிகேடினால் பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரைப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த வேலைத்திட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், சுற்றுலாப் பணியகம், கடற்படை, விமானப்படை, பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச அரச நிறுவனங்கள் ஆகியன ஒன்றிணைந்து செயற்பட்டன.

தூய்மையான மற்றும் அழகான நாட்டில் வாழ்வதற்கு அனைவரும் விரும்புகின்ற நிலையில், இந்த இலக்கை வெற்றிகரமாக அடைவது இலங்கையின் ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும். பொறுப்புள்ள நபர்களாக எமது கடமையைச் செய்யத் தவறினால், சிறந்ததொரு எதிர்காலத்தை எதிர்பார்க்க முடியாது எனவும், இதற்கு அனைவரினதும் செயலூக்கமான பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அவசியமானது எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்த மாபெரும் கரையோரச் சுத்திகரிப்பு வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த நவரத்ன, 51 ஆவது காலாட்படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரிஸ்வி ராசிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர்கள், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர், யாழ்ப்பாணப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர், பலாலி விமானப்படைத் தளத்தின் கட்டளை அதிகாரி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், படையினர், பொலிஸார், அரச அலுவலர்கள், பொதுமக்கள் பலரும் இந்த நிகழ்வில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (அ)

# போதை பாவனைக்கு எதிராக வவுனியாவில் நடை பயணம்

வவுனியா, மே. 24

எதிர்காலத்தை பறிக்கும் நச்சுப் போதைப் பொருள்களை பயன்படுத்துவதை நிறுத்துங்கள் எனும் தொனிப்பொருளில் வவுனியாவில் விழிப்புணர்வு நடைபயணம் ஒன்று இடம்பெற்றது.

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் குறித்த நடை பயணம் ஏற்ப்பாடு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட அலுவலகத்தில் ஆரம்பமான இந்த நடை பயணம் பழைய பஸ் நிலையப்பகுதி வரை ஊர்வலமாகச் சென்றது.

குறித்த நடைபயணத்தில் இளைஞர், யுவதிகள் என பலர் கலந்துகொண்டதுடன், போதைப் பாவனைக்கு எதிரான பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். (அ)



# போதை ஒழிப்பு விழிப்புணர்வு வீதி நாடகம் யாழ்ப்பாணத்தில்




யாழ்ப்பாணம், மே. 24

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முழு நாடும் ஒன்றாக அகன்று செல் போதை ஒழிப்பு விழிப்புணர்வு வீதி நாடக்கமும் நடை பயணமும் நேற்று யாழ்ப் பாணத்தில் இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்ப்பாண பிரதி பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதல் நிகழ்வாக முனியப்பர் கோவில் முன்றலில் போதை விழிப்புணர்வு வீதி நாடகம் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து போதை விழிப்புணர்வு நடை பவனி முனியப்பர் கோவிலடியிலிருந்து யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.

இதில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேகர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி, கிளீன் சிறீலங்கா பணிப்பாளர் கபிலன், இளைஞர் சேவை மன்ற அதிகாரிகள், இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)



# தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தை யாழில் திறந்து வைத்த ரில்வின் சில்வா

யாழ்ப்பாணம், மே. 24

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் அரியாலை பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்தை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

நிகழ்வில், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன் மற்றும் ஜெ.ரஜீவன், மாநகர சபை உறுப்பினர்களான, சு.கபிலன், ச.பிரதீபன் உள்ளிட்ட யாழ். மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# 86ஆவது இரத்த தான நிகழ்வு

வடமராட்சி, ஏப். 24

வல்வெட்டித்துறை இரத்த தானச் சங்கம் ஊடாக நடைபெற உள்ள 86 ஆவது இரத்த தான நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் கணபதி மஹால் திருமண மண்டபம் நெடியகாடு வல்வெட்டித்துறையில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வுக்கு குருதிக் கொடை வழங்கும் அனைவருக்கும் கௌரவமான சான்றிதழ் தயாரிக்க உள்ளதால் உங்கள் முழுப்பெயரை ஆங்கிலத்தில் அனுப்பி உதவுங்கள்.

இன்றைய தினத்தில் குருதிக் கொடை வழங்கும் அனைவரையும் பொன்னாடை அணிவித்து சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு வழங்கப்படும்.என சங்கத் தலைவர் பா வீரசுரேந்திரன் தெரிவித்தார். (அ-02)

# போதைக்கு எதிரான விழிப்புணர்வு நேற்று நடைபவனி கிளிநொச்சியிலும்

கிளிநொச்சி, மே. 24

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு நாடகமும் நடைபவனியும் நேற்றுக் காலை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடைபவனி, கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்பாக இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி பஸ் நிலையம் வரை முன்னெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பஸ் நிலைய வளாகத்தில் போதைப் பொருள் பாவனையின் தீமைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டதுடன், இளைஞர் மற்றும் யுவதிகளும் பங்கேற்றிருந்தனர். (அ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வவுனியா களுகுன்னாமடு அலகல்ல வீதி மக்கள் பாவனைக்காகத் திறந்து வைப்பு


வவுனியா, மே. 24

வவுனியா, களுகுன்னாமடு அலகல்ல வீதி காப்பெற் இடப்பட்டு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக் கவினால் நேற்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 42 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இவ்வீதி திறப்பு விழாவில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை தவிசாளர் சுதர்சன வீரக்கோன், வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் ஜொய்ஸ் குருஸ், மற்றும் உயர் அதிகாரிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



## சட்டத்தரணிகள், பொலிஸாருக்கு யாழில் டிஜிற்றல் சட்ட கருத்தரங்கு



யாழ்ப்பாணம், மே. 24

வடக்கு மாகாண சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸாருக்கான டிஜிற்றல் சட்டப் பணி தொடர்பான சட்டக் கருத்தரங்கம் இன்று சனிக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

மல்லாகம் சட்டதரணிகள் சங்கம், இலங்கை தகவல் தொழில்நுட்பச் சட்டத்தரணிகள் சங்கத்துடன் இணைந்து இந்த கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

இணையச் சட்டம், எண்ணிமச் சான்றுகள் மற்றும் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் சட்ட நடைமுறைகள் உள்ளிட்ட வளர்ந்து வரும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் தொடர்பான சட்டச் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வையும் அறிவையும் மேம்படுத்துதல், சிவில் வழக்குகளில் மின்னணு ஆதாரங்களின் ஏற்புத்தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் விளக்கவுரைகள் நடைபெற்றன.

இலங்கை தகவல் தொழில்நுட்ப சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும், இலங்கை சட்டத் தரணிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளருமான சட்டத்தரணி கலாநிதி சுனில் அபேயரத்ன மற்றும் இந்திய உச்ச நீதிமன்ற சட்டத்தரணி பிரபாகரன் ராமச்சந்திரன், யாழ். பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் நளிந்த டில்ருக் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்வின் பிரதம அதிதியாக தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திர மூர்த்தி கலந்துகொண்டார். (அ)

## மருதங்கேணிப் பொலிஸ் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட கள விஜயம்

யாழ்ப்பாணம், மே. 24

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு, மருதங்கேணி, மாமுனை கிராமங்களில் மருதங்கேணி பொலிஸ் பிரிவினரால் விசேட கள விஜயம் ஒன்று நேற்றுக் காலை 7 மணிமுதல் மேற்கொள்ளப்பட்டது

குறித்த விஜயத்தின்போது நீதிமன்றத்தின் உத்தரவின் பெயரில் தேடப்படும் சந்தேக நபர்கள் மற்றும் அடையாள அட்டை இல்லாத நபர்கள், மக்களின் சந்தேகத்திற்குரிய செயற்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது.

குறித்த கள விஜயத்தில் மருதங்கேணி பொலிஸாருடன் பருத்தித்துறை பொலிஸ் பிரிவினர், நெல்லியடி பொலிஸ் பிரிவினர் என பல பொலிசார் கலந்து கொண்டனர். (அ)



# சந்நிதி- கதிர்காமம் பாதயாத்திரை விசேட பூசை நிகழ்வுடன் ஆரம்பம்!





யாழ்ப்பாணம், மே. 24

கதிர்காம கந்தனின் வருடாந்த பெருந்த் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை நேற்றுக் காலை 9 மணியளவில் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

சந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றதனை தொடர்ந்து செல்வசந்நிதி முருகன் ஆலய பிரதமர் ஆர்ச்சகரால் கத்திர்காமம் செல்லும் யாத்திரிகர்களிடம் வேல் கையளிக்கப்பட்டதை தொடர்ந்து யாத்திரிகர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு சென்றனர். அங்கும் விசேட பூசைகள், நிகழ்வுகள் இடம்பெற்றன.

அங்கு யாத்திரிகர்களுக்கான உதவிகளை சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது. அதனை தொடர்ந்து அடியவர்கள் கதிர்காமத்திற்கான முதல் நாள் பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளனர்.

பாரம்பரியம்மிக்க சந்நிதி முருகனிலிருந்து கதிர்காமத்திற்கான பாதயாத்திரை 46 தினங்கள், 815 கிலோமீற்றர் கொண்ட மிக நீண்ட நெடும் நடைபயணமாகும்.

வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களை கடந்து செல்லும் குறித்த பாத யாத்திரையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்த்த பல நூற்று கணக்கானோர் வழி நெடுகிலும் இணைந்து கொள்வது வழமையாகும்.

கதிர்காம கந்தன் ஆலய கொடியேற்றம் 2026 ஜூலை 15 அன்று ஆரம்பமக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முல்லைத்தீவிலும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு

முல்லைத்தீவு, மே. 24

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தில் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்டத்தில், போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.

விழிப்புணர்வு பேரணி முல்லைத்தீவு மகா வித்தியாலத்தில் இருந்து ஆரம்பமாகி, முல்லைத்தீவு மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது.

உங்கள் எதிர்காலத்தை பறிக்கும் நச்சுப் போதைப் பொருளை பயன்படுத்துவதை நிறுத்துங்கள் என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற பேரணியில், பல்வேறு கோசங்கள் எழுப்பப்பட்டன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐயாத்துரை தவேந்திரன் தலைமையில் பேரணியில்,

நிர்வாக பணிப்பாளர் மனுல சமல் பெரேரா, ஜெய்க்கா நிறுவன தொண்டர் அறற்றா சகமோற்றோ, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு மாகாண பணிப்பாளர் கே.டி.சி.காமினி, கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் இமக்குலேற்றா புஸ்பானந்தன், முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் எஸ்.மேகஜீவன், ஆசிரியர்கள், மாணவர்கள், நகமா நிறுவன பணியாளர்கள், இளைஞர் கழக மாவட்ட மற்றும் பிரதேச சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் இளைஞர் யுவதிகள் பங்கேற்றனர். (அ)

## மாமுனை கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டம்



யாழ்ப்பாணம், மே. 24

தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று மாமுனை கடற்கரைப் பகுதியில் சுத்தம் செய்யும் நடவடிக்கை காலை 8 மணியளவில் மிக சிறப்பாக ஆரம்பமானது.

“சுத்தமான கடற்கரை கவர்ந்திழுக்கும் சுற்றுலாத்தளம்” எனும் தொனிப்பொருளை அடைவதற்கு மாவட்ட மட்டத்தில் உள்ள கடற்கரைகளை தூய்மைப்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக சுத்தமாகப் பேணுவதற்கும் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அதிகளவான பிளாஸ்ரிக் கழிவுப் பொருள்கள், கண்ணாடியிலான கழிவுப் பொருள்கள் என ஏராளமான கழிவுகள் உரிய முறையில் அகற்றப்பட்டதோடு தொடர்ந்து வரும் காலங்களிலும் நிலைபேறான தூய்மையாக்கலை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் வேலை திட்டத்தில் இராணுவத்தினர், செம்பியன் பற்று பங்குத்தந்தை ஜஸ்ரின் ஆதர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் மாமுனை கலைமகள் விளையாட்டு கழகத்தினர், மாமுனை கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

24.05.2026 ஞாயிற்றுக்கிழமை

பராபவ வருடம், வைகாசி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**

**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**

– யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

## மாகாணசபைகளின் எதிர்காலம் குறித்து அரசு அல்ல, ஜே.வி.பி.யே தீர்மானிக்கும்

மாகாணசபைகள் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் தொர்பான விடயங்களில் அரசாங்கம் எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை ஜனாதிபதியும் அமைச்சரவையும் அல்ல, தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் பொதுச் செயலாளர் சில்வின் சில்வாதான் தீர்மானிக்கிறார் போன்று தெரிகிறது.

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை, மாகாண சபைகள் முறை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று சில்வா ஏற்கெனவே கூறியிருந்தார். அதேவேளை, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் தேவையில்லை, அவர்கள் அல்ல தமிழ்க் கட்சிகள்தான் அதிகாரப் பரவலாக்கத்தைக் கோருகின்றன என்றும் இடைக்கிடை அவர் சொல்வார்.

மாகாணசபை தேர்தல்களை நடத்தி மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் மாகாண நிருவாகத்தைக் கையளிக்காமல், புதிய அரசியலமைப்பு வரும்வரை மாகாண சபைகள் முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று கூறுவது ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியான ஆளுநர்களின் நிருவாகத்தில் மாகாணங்கள் தொடர்ந்தும் இருக்கும் என்று கூறுவதற்கு சமமாகும்.

மாகாண சபை தேர்தல்களை எட்டு வருடங்களாக நடத்தாமல் ஆளுநர்களின் நிருவாகத்தில் வைத்திருப்பது அதிகாரப் பரவலாக்க கோட்பாட்டையே கேலி செய்வதாகும். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு பற்றி எமக்கு எந்த மயக்கமும் இல்லை. தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்க ஏற்பாடுகளின் மூலமாக தீர்வைக் காண்பதற்கு இதுகாலவரை அரசாங்கங்கள் முன்னெடுத்த சகல முயற்சிகளையும் தீவிரமாக எதிர்த்த ஒரு எதிர்மறையான வரலாற்றை ஜே.வி.பி. கொண்டிருக்கிறது.

ஆனால், ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலத்திற்குள் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படும் என்று 2024 தேசிய தேர்தல்களில் நாட்டு மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது. ஆனால், அதிகாரத்துக்கு வந்து 19 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், மாகாணசபை தேர்தல்களை நடத்தாமல் மேலும் காலத்தை எவ்வாறு கடத்துவது என்பதிலேயே அரசாங்கம் அக்கறை காட்டுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

எந்த முறையின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவது என்று ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகளின் கோலத்தைப் பார்க்கும்போது தற்போதைக்கு தேர்தல்கள் நடத்தப்படும் சாத்தியமில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது.

நாட்டின் தற்போதைய நிகழ்வுப் போக்குகள் காரணமாக இந்த வருடம் மாகாணசபை தேர்தல்களை நடத்த முடியாது என்றும் அந்த தேர்தல்களை நடத்தும் சாத்தியம் குறித்து அடுத்த வருடம் ஆராயப்படும் என்றும் கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு ரில்வின் சில்வா கடந்த வெள்ளிக்கிழமை கூறியிருக்கிறார். மாகாணசபைகள் தொடர்பில் அவர் இதுவரையில் கூறிவந்திருக்கும் கருத்துக்களுக்கு ஜனாதிபதியோ அல்லது முக்கிய அமைச்சர்களோ பிரதிபலிப்புக்களை வெளிக்காட்டுவதில்லை.

கடந்த வாரம் மட்டுநகரில் புதிய பொது நூலகத் திறப்பு விழாவில் பேசிய ஜனாதிபதி ஜனாதிபதி இனிமேல் நாட்டில் போர் மூளுவதற்கு அனுமதிக்கப்போவதில் லை என்று ஜனாதிபதி கூனினார். அங்கு உரையாற்றிய இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் போர் மீண்டும் மூளாமல் இருக்க வேண்டும் என்றால் கணிசமான அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்று குறிப்பிட்டார். அதற்கு பதிலளிக்காமல் ஜனாதிபதி மௌனம் சாதித்தார்.

ஜே.வி.பி. தலைமையிலான இந்த அரசாங்கத்திடம் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் எதையும் புதிதாக எதிர்பார்க்க முடியாது. ஆனால், ஏற்கெனவே இருக்கும் அரைகுறையான அதிகாரங்களுடனான மாகாண சபைகளை அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதே இப்போதுள்ள முக்கிய கேள்வி.

# முதல்வர் விஜய் வசம் உள்ள துறையில் தி.மு.க. பிரதிநிதிகள் ஆதிக்கம்!



நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ள நிலையில், நகர்ப்புற உள்ளாட்சிகள் பெரும்பாலும் திமுக வசமுள்ளன. இந்த மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் 8 மாதங்கள் உள்ள சூழ்நிலையில், பல இடங்களில் இப்போதே அரசுடனான மோதல் தொடங்கியுள்ளது.

தனது அறையில் முதல்வர் விஜய் படத்தை வைக்கக்கூடாது என கோவை மேயர் ரங்கநாயகி தடுத்துள்ளார். சென்னை மேயர் பிரியா ராஜன், இதுவரை முதல்வரைச் சந்திக்கவில்லை. இத்தகைய போக்கு சென்னையில் பொது மக்களை பாதிக்குமென்று "வாய்ஸ் ஒவ் பீப்பிள்" அமைப்பு கருத்துத் தெரிவித்துள்ளது.

வாக்குச்சாவடி வீதமாக எந்தக் கட்சிக்கு எவ்வளவு வாக்கு கிடைத்துள்ளது என்பது தெரியுமென்பதால், வரும் நாள்களில் உள்ளாட்சிப் பணிகளில் அது எதிரொலிக்கும் என்கிறார் சமச்சீர் வளர்ச்சிக்கான கூட்டமைப்பின் தலைவர் வழக்கறிஞர் லோகநாதன்.

ஆனால் அன்றாடப் பணிகளுக்கும், அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது என்கின்றனர் தி.மு.க. மக்கள் பிரதிநிதிகள்.

"நான் பதவியிலிருக்கும் வரை, மேயருக்கு ஒதுக்கப்பட்ட அறையில் முதல்வர் விஜய் படத்தை வைக்க வேண்டாமென்று கூறியிருப்பதாக" கோவை மேயர் ரங்கநாயகி தெரிவித்தார்.

தனக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு ஓய்வில் இருப்பதால்தான் முதல்வரைச் சந்திக்கவில்லையென்று பிபிசியிடம் கூறிய சென்னை மேயர் பிரியா ராஜன், மக்களுக்காக அரசுடன் இணைந்து பணி செய்வோம் என்றார்.

அமைச்சரவையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதல்வர் விஜய் வசம் உள்ளது. மக்களுக்கு நேரடியாக சேவையாற்றக்கூடிய முக்கியப் பொறுப்பிலுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிதண்ணீர் வழங்கல்துறையின் கீழ்தான் தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் உள்ளன.

கடந்த **2022** ஆம் ஆண்டு நடந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், சென்னை, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட **21** மாநகராட்சிகள் உட்பட பெருவாரியான நகர்ப்புற உள்ளாட்சிகளை திமுக கூட்டணி கைப்பற்றியது.

சில நகராட்சிகள், பேரூராட்சிகளைத் தவிர, மேயர், துணை மேயர், நகராட்சித் தலைவர், பேரூராட்சித் தலைவர் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பொறுப்புகளை திமுகவைச் சேர்ந்தவர்களே அதிகமாக வகித்து வருகின்றனர்.

தமிழகத்தில் இதுவரை நடந்துள்ள பெரும்பாலான நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களில், மாநிலத்தில் ஆளுகின்ற கட்சியே அதிகமான இடங்களைக் கைப்பற்றியுள்ளன. தமிழ்நாடு சட்டப்பேரவையின் பதவிக்காலம் முடிந்த பின், சில மாதங்கள் கழித்து நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகங்களின் பதவிக்காலம் முடிவதே வழக்கம். வரும் **2027** ஜனவரி வரையிலும் தமிழக நகர்ப்புற உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகளுக்கு பதவிக்காலம் உள்ளது.

வழக்கமாக தி.மு.க. அல்லது அ.தி.மு.க. மக்கள் பிரதிநிதிகள் இருக்கும்போது, இவ்விரண்டு கட்சிகளில் மற்றொரு கட்சி, மாநிலத்தில் ஆட்சிக்கு வரும்போது, நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் சிறுசிறு மோதல்கள் நடக்கும்.

இப்போது முதல்முறையாக வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்திருப்பது, ஒரு புதிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்போதே ஆளும்கட்சிக்கும், நகர்ப்புற உள்ளாட்சிகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையில் மோதல் போக்கு உருவாகியுள்ளது. தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்ற பின்பு, தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் வைப்பதற்காக, அதிகாரபூர்வமான விஜய் புகைப்படம், அனைத்து அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கோவை மாநகராட்சியில் மேயர் அறையில் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட முதல்வர் விஜய் படத்தை வைப்பதற்கு கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி மறுத்துள்ளார். மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள அறையில் முதல்வர் விஜய் படத்தை வைக்கக்கூடாது என்று மறுத்து, அவருடைய உதவியாளர் இருக்கைக்கு மேற்புறத்தில் அதை வைக்கச் செய்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசியுள்ள அவர், "எங்களுடைய பதவிக் காலம் வரும் ஜனவரி வரையிலும் இருக்கிறது. அதுவரையிலும் எனது அறையில் எங்களுடைய தலைவர்கள் படங்கள் மட்டுமே வைக்க அனுமதிப்பேன். முதல்வர் விஜய் படத்தை வைக்கமாட்டேன். அதேபோன்று எங்கள் கட்சியின் தலைவர்கள் படங்களையும் எடுக்கமாட்டேன்." என்று கூறியிருந்தார்.

அதேபோன்று மேயர் அறையில் இப்போதும் முன்னாள் முதல்வர்கள் கருணாநிதி, ஸ்டாலின், முன்னாள் துணை முதல்வர் உதயநிதி, முன்னாள் அமைச்சர்கள் கே.என். நேரு, செந்தில் பாலாஜி ஆகியோருடைய புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை இன்னும் அகற்றப்படவில்லை.

பிபிசி தமிழிடம் பேசிய கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி, "நான் சொன்னது உண்மைதான். மாநகராட்சி நிர்வாகமே அந்த அறையை எனக்கு ஒதுக்கியிருந்தாலும் அது மேயருக்கு ஒதுக்கப்பட்ட அறை என்ற வகையில், அதில் எங்களுடைய கட்சித் தலைவர்களின் படங்களை வைப்பதற்கு எனக்கு உரிமை உள்ளது. அதேநேரத்தில் முதல்வர் விஜய் படத்தை வைப்பதில் எனக்கு விருப்பமில்லை. அதனால் மறுத்தேன்." என்றார்.

"அதேநேரத்தில் மேயர் அலுவலகத்தில் முதல்வர் படம் இருக்க வேண்டுமென்பதால் அதை வேறொரு இடத்தில் வைத்துள்ளோம். மாநகராட்சி மன்றக் கூடத்தில் முதல்வரின் படம் வைக்கப்பட்டுள்ளது. வரும் ஜனவரி வரை எங்களுக்கு பதவிக்காலம் உள்ளது. அதுவரை எனது அறையில் முதல்வர் விஜய் படத்தை வைக்க வேண்டாமென்பதே எனது நிலைப்பாடு." என்றும் அவர் கூறினார்.

அரசு விதிகள் என்ற முறையில் மேயர் அறையில் முதல்வர் புகைப்படத்தை கட்டாயம் வைக்க வேண்டுமென்று உத்தரவு வந்தால் அதை ஏற்பீர்களா என்று அவரிடம் கேட்டதற்கு, "அப்படி கட்டாயப்படுத்த மாட்டார்கள் என்றுதான் நினைக்கிறேன். அப்படியொரு நிலை வந்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போதைக்கு எனது அறையில் வைக்க நான் அனுமதிக்கவில்லை." என்றார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் ஆய்வுக் கூட்டம் நடந்தபோது இதுகுறித்து கோவை மாநகராட்சி விதிகளில் என்ன கூறப்பட்டுள்ளது, மாநகராட்சி நிர்வாகம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என்பது பற்றி கோவை மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரனிடம் பிபிசி பேசியபோது,

**(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கவனம் சிதறினால் வாழ்க்கை சிதறும்!


பவித்ரா நந்தகுமார்

அண்மையில் எனது நெருங்கிய உறவினர் ஒருவர் திரைப்படத்தைக் காண குடும்பத்துடன் திரையரங்குக்கு சென்றிருந்தார். ஆண்டு இறுதித் தேர்வு விடுமுறையில் இருந்த பிள்ளைகளும் உடன் சென்றனர். படம் சுமாராக இருந்த நிலையில் இடைவேளையிலேயே வீட்டுக்கு போகலாம் என அடம்பிடித்தார்களாம் பிள்ளைகள்.

“இந்தத் திரைப்படத்தை காண்பதற்காக நிறைய பணம் செலுத்தி இருக்கிறோம். முழு திரைப்படத்தையும் பார்த்து விட்டுப் போகலாம்” என உறவினர்கள் தொடர்ந்து அறிவுரை சொன்னபோதும் காது கொடுக்காது, “நாங்கள் வாடகை வாகனம் பிடித்து வீட்டுக்குச் செல்கிறோம்” எனச் சொல்லி மூன்று சிறுவர்களும் கூட்டாக வெளியேறி இருக்கிறார்கள். இவர்கள் கல்லூரியில் படிக்கும் பதின் பருவ வயதைக் கடந்தவர்கள் என்று நினைத்து விடாதீர்கள். மூவரும் பள்ளிக்கல்வி படிக்கும் 12 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள்.

மற்றொரு நாள் “இன்று கோயிலில் அபிஷேகம் இருக்கிறது. அதனால் கருவறைக்குள் சென்றால் வெளியே வர ஒரு மணி நேரம் ஆகும்” என்று முன்கூட்டியே சொன்ன நிலையில், “அப்படியானால் நாங்கள் கோயிலுக்கு வர மாட்டோம். நீங்கள் மட்டும் சென்று வாருங்கள்” என்று அடம் பிடித்தார்களாம். கேரம்போர்டு, செஸ் விளையாடுங்கள் என விளையாட்டு உபகரணங்களை வாங்கிக் கொடுத்தால்கூட, “இதையெல்லாம் விளையாட நீண்ட நேரம் ஆகும். எங்களுக்குத் தேவை இல்லை” என விளையாட்டிலும் ஆர்வம் காட்டவில்லையாம். பிறகு நாள் முழுதும் அப்படி என்னதான் செய்கிறார்கள் என்றால், காலை தூங்கி எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை தம் பெற்றோரின் அறிதிறன்பேசியைப் பயன்படுத்தியபடியே மற்ற நிகழ்வுகளின் மீது ஆர்வம் இல்லாது இருக்கிறார்கள் என வருத்தப்பட்டார் உறவினர்.

இன்றைய எண்ம யுகத்தில் மனிதனின் மிகப் பெரிய சவால்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது இந்த கவனத் திறன் சுருங்கல். “கவனம் என்பது ஒரு நாணயம். அதை எங்கே செலவழிக்கிறோம் என்பதில்தான் நம் வாழ்க்கையின் தரம் அடங்கியுள்ளது” என்றார் தத்துவஞானி வில்லியம் ஜேம்ஸ். ஆனால், இன்று அந்த நாணயம் சில்லறையாக சிதறிக் கிடக்கிறது.



எண்ம யுகத்தின் மிகப் பெரிய இழப்பு பணமும் நேரமும் அல்ல, நம் கவனத்திறன். மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆய்வு ஒன்று மனிதனின் சராசரி கவனத்திறன் எட்டு விநாடிகளாகக் குறைந்து விட்டது என்கிறது. 2026-இல் நாம் இன்னும் மோசமான நிலையில் இருக்கிறோம்.

நாம் எப்படி இங்கு வந்தோம்? விரல் நுனியில் உலகம் இருப்பதால் மூளைக்குள் புயலடிக்கத் தொடங்கியிருக்கிறது. ஒருவர் நாள் ஒன்றுக்கு 6.5 மணி நேரம் கைப்பேசி திரையைப் பார்க்கிறார். ஒவ்வோர் ஆறு நிமிஷத்துக்கும் ஒருமுறை கைப்பேசியைத் தொடுகிறார். இன்ஸ்டாகிராம் ரீல்ஸ், யூடியூப் ஷார்ட்ஸ், வாட்ஸ் ஆப் ஸ்டேட்டஸ் என 15 விநாடி உள்ளடக்கங்கள் நம் மூளையில் “டோபமைன் ஹிட்” கொடுக்கின்றன. மூளை அந்த வேகத்துக்கு பழகிவிட்டது. இதனால் 45 நிமிஷ பாடவேளை, 220 பக்க புத்தகம், முக்கிய நபருடன் ஆழமான உரையாடல் எல்லாம் நேரத்தை விழுங்கும் காரணிகளாகப் பார்க்கப்படுகின்றன.

பெரியவர்களுக்கே அவ்வப்போது கைப்பேசியைத் தொடும் தொற்று இருக்கிறது என்று சொல்லும் போது மனக்கட்டுப்பாடு அதிகம் இல்லாத பதின் பருவ பிள்ளைகளின் நிலை என்ன ஆகும்? அதிலும் அவர்களை அதிகம் எதிர்கொள்ளும் ஆசிரியர்களின் நிலை மிகவும் கடினம்.

“ரீல்ஸ்”க்கும் “ஷார்ட்ஸ்”க்கும் பழகியவர்கள் வகுப்பறையில் 45 நிமிஷங்களுக்கு, ஏன்...30 நிமிஷங்களுக்குக்கூட தொடர்ச்சியாக ஒரு பாடத்தை கவனிக்கத் திணறுகின்றனர்.

ஒரு பாட வேளையான 45 நிமிஷத்திற்கு இடையில் ஓர் இடைவேளை கிடையாதா எனும் அளவுக்கு பாடத்தின் மீது கவனத்தைக் குவிக்கத் தடுமாறுகின்றனர். வகுப்பறையில் ஒரு கணக்கைப் போட (தீர்க்க) தொடங்கினால் மாணவ மாணவிகள் ஆழமாக புரிந்து கொள்ள அடுத்தடுத்த வழிமுறைகளில் அவர்களின் சிந்தனையைத் தூண்ட வேண்டும். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு பல்வேறு விதமான பதில்கள் வரும். அவ்வாறு வரும் ஒவ்வொரு தவறான பதில்களிலிருந்தும் புதிரை விடுவித்தபடி சரியான விடைக்கு அடிக்கோடிடுவார் ஆசிரியர். அதனால்தான் வகுப்பறையில் நிகழும் இந்த கற்றல் கற்பித்தல் நினைவடுக்கில் நீண்ட நாள் தங்கியிருந்து ஞாபகத்துக்கு வலு சேர்க்கிறது.

ஆனால், கவனத் திறன் சுருங்கியவர்கள் ஒரு கணக்கை போடத் தொடங்கினால் உடனடியாக பதில் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஒரு விவாதம் மூலமாகவோ, தவறான பதிலிலிருந்தோ சரியான விடையைக் காணும் நிதானமும் பொறுமையும் அவர்களிடத்தில் இல்லை.

பாடம் எடுக்கும் போது அவர்களின் கவனத்தைப் பாடத்தின் மீது குவிக்க இன்றைய ஆசிரியர்கள் மிக அதிகமாக மினக்கெட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு நிமிஷமும் அவர்களுக்கு சவால்தான். கற்பித்தலில் புதுப்புது உத்திகளை நித்தம் அறிமுகம் செய்து மாற்றிக் கொண்டே இருக்க வேண்டிய நிலை. கற்றல் கற்பித்தலுக்கு அடுத்து தேர்வுக்கு வருவோம். இந்த கவனத் திறன் குறைபாடு உள்ளவர்கள் தங்கள் முழு கவனத்தை குவித்து தேர்வு எழுதும் தகுதியை இழக்கிறார்கள்.

புகையிலை, மது, குட்கா போல கைப்பேசியும் ஒரு போதைதான். இதனால், பெரும்பாலான மாணவ மாணவிகளுக்கு 60, 70 மதிப்பெண்கள் எடுத்தாலே போதும் என்ற மனநிலை அதிகரித்துள்ளது. 90க்கு மேல் அல்லது

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 24.05.2026 - 30.05.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 10
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் வரும் நெருக்கடிகளை சமாளிக்க முடியும். கடன் பிரச்சனை படி படியாக குறைய தொடங்கும். மேற்கொண்டு கடன் வாங்கும் சூழல் இருக்காது. பெற்றோர்கள் நலனில் அக்கறைகொள்ளவும். உறவினர்களிடையே இருந்து வந்த மன கசப்பு நீங்கும். நினைத்த காரியங்கள் எளிதில் நடந்தேறும். உத்யோகத்தில் உயர்வு நிலை உண்டு. வியாபாரத்தில் நிறைய கற்றுக்கொள்ள முடியும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, மனதில் உள்ள எண்ணங்களும், திட்டங்களும் நல்ல முறையில் செயல் வடிவம் பெறும். பொருளாதார நிலை சீரான வளர்ச்சி பெறும். சுய முயற்சியால் வாழ்வில் முன்னேற்றம் அடைய முடியும். உடல் உபாதைகள் நீங்கும். உறவினர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொண்டு சிறப்பிக்க முடியும். குடும்பத்தில் தேவையற்ற செலவுகள் ஏதும் செய்யாமல் பார்த்துக்கொள்ளவும். வழக்கு விஷயங்களில் சாதகமான தீர்ப்பு வரும். புது இடத்தில் உத்யோகம் அமையும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, நீண்ட நாள் பிராத்தனைகள் நிறைவேறும். குடும்பத்துடன் தூர பயணம் மேற்கொள்ள வேண்டிவரும். பொருளாதார நிலை ஏற்ற இறக்கத்துடன் இருக்கும். ஒவ்வொரு விவகாரத்திலும் அதிக அலைச்சலை சந்திக்க நேரிடும். கடன் பிரச்சனையை ஓரளவு சமாளிக்க முடியும். உடல் நிலையில் முன்னேற்றம் இருக்கும். யாருக்கும் வாக்கு கொடுக்காமல் இருப்பது நல்லது. உத்யோகத்தில் பணிசுமை கூடும். தொழில், வியாபாரத்தில் சாதிக்க முடியும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, தன்னம்பிக்கையும் மன தைரியமும் அதிகரிக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகளை ஏற்பட்டாலும், அதை எளிதாக சரி செய்து கொள்ள முடியும். நெருங்கிய உறவினர்களுடன் சுமுக உறவு காணப்படும். புதிய வீடு, மனை போன்றவற்றை வாங்கும் எண்ணம் மேலோங்கும். மற்றவர்களின் ஆலோசனைக்கு செவி சாய்பதை தவிர்க்கவும். உத்யோகத்தில் சில சலுகைகள் கிடைக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, மனதில் நினைத்த காரியத்தை உடனுக்குடன் செய்ய முடியும். குடும்ப சூழ்நிலைக்கு ஏற்ப நடந்துகொள்ளவும். உற்றார், உறவினர்களால் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும். சொத்து வழக்கில் இழுபறி நிலை நீடிக்கும். குடும்பத்தில் வீண் செலவுகள் எதுவும் இல்லாமல் பார்த்து கொள்ளவும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, புதிய முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். முன்கூட்டியே திட்டமிட்டு காரியத்தில் ஈடுபடுவதன் மூலம் ஒரு சில இழப்புகளை தவிர்க்க இயலும். தூர பயணங்களால் வீண் அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த வங்கி கடன் கிடைக்கும். கணவன் மனைவிடையே விட்டு கொடுத்து போகவும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற முடியும். குல தெய்வ அருள் கிடைக்கும். இது வரை நீங்கள் பட்ட கஷ்டங்களுக்கு ஒரு முடிவு வரும். உத்யோக மாற்றம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் போட்டி இருக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, எந்த ஒரு எதிர்ப்பையும் சமாளிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உறவினர்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு நீங்கும். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். கணவன் மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சொந்த பந்தங்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளவும். உத்யோகத்தில் பாராட்டு கிடைக்கும். புது தொழில் யோகம் அமையும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் நிலுவையில் உள்ள முக்கிய வேலைகள் முடிவடையும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். நிலையில் திட்டமிட்ட செயல்களை சிறப்பாக செய்து முடிக்க முடியும். பண வரவு குறைவாக இருந்தாலும் மன நிறைவு இருக்கும். பெற்றோர்களின் ஆலோசனை கைகொடுக்கும். அண்டை, அயலாரோடு நட்புறவு ஏற்படும். இரவு நேர வாகன பயணங்களை தவிர்க்கவும். உத்யோகத்தில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் விரிவாக்கம் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, மனதில் பட்டதை தைரியமாக பேசுவது நல்லது. ஓயாத அலைச்சல் காரணமாக உடலில் அசதியும், சோர்வும் ஏற்படுமமறைமுக எதிர்ப்புகள் நீங்கும். காரிய தடை விலகும். கணவன் மனைவிடையே பனிப்போர் ஏற்படும். குடும்ப பிரச்னையை பேசி சரி செய்துகொள்ளவும். தெய்வ பிராத்தனைகள் நிறைவேற்றும் வாய்ப்புகள் கை கூடி வரும். உத்யோகத்தில் உங்க கை ஓங்கும். தொழில், வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, குடும்பத்தில் கௌரவம் உயரும் படியான சம்பவங்கள் நிகழும். மற்றவர்களிடம் பேசும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. எந்த விஷயத்திலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்ல பலனை தரும். நெடுநாட்களாக மனதில் திட்டமிட்டு வைத்திருக்கும் காரியத்தினை சாதித்துக்கொள்ள முடியும். உத்யோகத்தில் ஆதரவு பெருகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெரும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசி நேயர்களே, இந்த வார பலன்படி, சுற்றி இருப்பவர்கள் யாரும் நம்மை புரிந்துகொள்ளவில்லையே என்ற பெரிய ஆதங்கம் இருக்கும். இக்கட்டான சூழலில் அமைதி காப்பது அவசியம். பொருள் வரவு தொடர்ந்தாலும், குடும்ப நபர்களிடம் ஏற்பட்ட மனவருத்தம் நீங்கி சகஜ நிலைக்கு திரும்ப முடியும். ஆன்மிகப் பிரயாணங்கள் மனதிற்கு அமைதியைத் தரும். உத்யோகத்தில் ஈகோ பிரச்னையை தவிர்க்கவும். தொழில், வியாபாரம் விருத்தியடையும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசி அன்பர்களே, இந்த வார பலன்படி, கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவதில் சிரமம் இருக்கும். நீங்கள் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெரும். வாகனம் யோகம் உண்டு. தேவையில்லாத வீண் செலவுகளும் ஏற்படும். வெளியிடங்களில் வீண் விவாதங்களை தவிர்க்கவும். உத்யோகத்தில் பதவி உயர்வு கிடைக்கும். தொழில், வியாபாரம் மேன்மையடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கை தமிழர் அரசியலை இதழியலில் ஆவணப்படுத்திய ஒரு சகாப்தத்தின் முடிவு



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

கனடாவின் ரொறண்டோ நகரில் 2026 மே 17 ஆம் திகதி இடம்பெற்ற டேவிட் பியூவெல் ஜெயராஜின் மரணம் பத்திரிகைத்துறையில் இருந்து மாத்திரமல்ல, இலங்கைத் தமிழ்ச் சமூகத்திடமிருந்தும் அதன் விமோசனத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த ஒரு பெரிய ஆளுமையை அபகரித்துச் சென்று விட்டது. அவரது இழப்பை ஈடுசெய்ய முடியாதது என்பதை விடவும் நிச்சயமாக ஈடுசெய்யப்பட வேண்டியது என்றே கூறவேண்டும். அவரைப் போன்ற ஒரு பத்திரிகையாளர் தமிழ்ச் சமூகத்துக்குத் தேவை. 72 வயதை அடைவதற்கு நான்கு நாட்கள் முன்னதாக அவர் எம்மிடமிருந்து விடைபெற்றிருக்கிறார்.

ஜெயராஜ் ஒரு புறத்தில் நேசிக்கப்பட்ட அளவுக்கு மறுபுறத்தில் வெறுக்கப்பட்டவராகவும் விளங்கினார். சரியானது என்று தனது மனதிற்பட்டதை ஒளிவு மறைவின்றி துணிச்சலாக பொது வெளியில் சொல்லிவிடும் அவரது இயல்பே அதற்கு காரணம். அவர் பிரதானமாக அரசியலையே எழுதினார். அதனால் தங்களது அரசியல் நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஒவ்வொருவரும் ஜெயராஜை நோக்கினார்கள்.

தன்னை மற்றவர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்று அவர் கவலைப்பட்டிருந்தால் சுமார் அரை நூற்றாண்டு கால அனுபவத்தைக் கொண்ட தனித்துவமான பத்திரிகைத்துறை ஆளுமையாக அவரால் மேலழுந்திருக்க முடியாது.

ஜெயராஜின் எழுத்துக்கள் சமகால அறிக்கைகளாக மாத்திரமல்ல, இன்றியமையாத வரலாற்று ஆவணங்களாகவும் அமைந்தன. சிக்கலான புவிசார் அரசியல் பிரச்னைகள், பிராந்திய மோதல்கள் மற்றும் உள்நாட்டு அதிகாரப் போக்குகளை அவிழ்த்து விளக்கும் அவரது இணையற்ற ஆற்றல் காரணமாக அவரது அரசியல் ஆய்வுக் கட்டுரைகள் நீண்டகாலமாக அரசாங்கத் தலைவர்கள், அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள் மற்றும் அரசியல் அக்கறையுடைய குடிமக்கள் என்று பல்வேறு தரப்பினரதும் கண்டிப்பான வாசிப்புக்கு உரியவையாக விளங்கின.

அச்சமின்றி பகுப்பாய்வு செய்து எழுதவும் இலங்கை அரசியலின் குறிப்பாக, தமிழர் அரசியல் வரலாற்றின் சிக்கலான போக்குகளையும் பரிமாணங்களையும் அவை நிகழும்போதே பதிவு செய்யவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் ஜெயராஜ். அரசியல் பகுப்பாய்வுத்துறையில் இலங்கையில் மாத்திரமல்ல, தெற்காசியப் பரப்பிலும் கூட மகத்தான ஆளுமையாக பலதசாப்தங்களாக விளங்கியவர் என்று அவரைக் கூறமுடியும்.

இரு வேறு உலகங்கள் போன்று இனரீதியாகத் துருவமயப்பட்டிருக்கும் இலங்கைச் சமூகத்தில் ஜெயராஜின் பணி துல்லியமாக உண்மைகளைச் சரி பார்ப்பதிலும் ஆழமான நினைவாற்றலிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் உறுதியான அர்ப்பணிப்பிலும் நிலைகொண்டிருந்தது. ஜெயராஜுக்கு நாம் செய்யும் அஞ்சலி, அறிவு சார்ந்த துணிச்சலினாலும் செம்மையான விபரிப்பாலும் வரையறுக்கப்பட்ட பத்திரிகையாளர் ஒருவரின் வாழ்நாள் பணிக்கு வழங்கப்படும் கௌரவமாகும்.


அதிகாரத்தில் உள்ளவர்களை நோக்கி உரத்துப் பேசுதல், தெளிவுடனும் கண்ணியத்துடனும் தளராத நேர்மையுடனும் அநீதிகளுக்கு எதிராகக் குரல்கொடுத்தல் ஆகியவையே ஊடகங்களின் உண்மையான பணி என்ற நம்பிக்கையைக் கொண்ட பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் அவதானிகளுக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் ஜெயராஜின் பங்களிப்பு என்றென்றைக்கும் நிலைத்திருக்ககூடிய ஒரு வழிகாட்டியாகும்.

கொழும்பில் ஆங்கில மொழி மூலம் கல்விகற்ற உயர் வர்க்கக் குடும்பம் ஒன்றில் இருந்து அல்லது பல்கலைக் கழக கல்விப் பின்புலத்தில் இருந்து வந்த தமிழ் பேசும் ஆங்கில ஊடகவியலாளர்களைப் போலன்றி, ஜெயராஜ் தனது ஊடகத்துறைப் பயணத்தை தமிழ்ப் பத்திரிகையின் அடிமட்டத்தில் இருந்தே தொடங்கினார். 1977 ஆம் ஆண்டில் இலங்கையின் முன்னணி தமிழ்ப் பத்திரிகையான வீரகேசரியில் இணைந்து மூத்த பத்திரிகையாளர்கள் பலருடன் பணியாற்றிய அவர், 1981 ஆம் ஆண்டில் 'தி ஐலண்ட்' பத்திரிகை மூலம் ஆங்கில ஊடகத்துறைக்கு மாறுவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பிராந்திய நிருபராக பணியாற்றிய அனுபவம் காரணமாக கெட்டியான அடித்தளத்தை அமைத்துக் கொண்டார்.

'தி ஐலண்ட் பத்திரிகையில் இணைந்து குறுகிய காலத்துக்குள்ளாகவே அதன் பிரதி செய்தி ஆசிரியராக உயர்ந்த ஜெயராஜ் எழுதிய 'கிடுகு வேலிக்குப் பின்னால்' **(Behind the Gadjan Curtain)** என்ற அரசியல் பத்தி மிகவும் பிரபல்யமானதாக விளங்கியது.

இந்தியாவின் செல்வாக்குமிக்க ஆங்கில தினசரிகளில் ஒன்றான ' தி இந்து' மற்றும் 'ஃபுரொண்ட்லைன்' சஞ்சிகையின் கொழும்பு செய்தியாளராகவும் பணியாற்றிய ஜெயராஜ் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான 'சற்றர்டே றிவியூ' ஆங்கில வாரப் பத்திரிகையின் பிரதி ஆசிரியராகவும் குறுகிய காலம் பதவி வகித்தார்.

அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைக்கான நீமன் ஆய்வுநிலை மாணவராக 1988 ஆம் ஆண்டில் அனுமதி பெற்ற ஜெயராஜ் அடுத்த வருடம் கனடாவுக்கு புலம் பெயர்ந்தார். அந்த நாட்டில் அவர் 'செந்தாமரை, 'மஞ்சரி" என்ற இரு தமிழச் சஞ்சிகைகளை ஆரம்பித்து அவற்றின் ஆசிரியராகப் பணியாற்றினார். அன்றைய இலங்கைத் தமிழ் அரசியலின் மாச்சரியங்களின் தாக்கங்கள் காரணமாக அந்த சஞ்சிகைகளை நீண்ட காலத்துக்கு வெளியிட அவரால் முடியாமற் போய்விட்டது.



சுயாதீனப் பத்திரிகையாளர் என்ற வகையில் அவர் கனடா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் பல்வேறு சஞ்சிகைகளில் எழுதினார். இறுதியாக அவர் கொழும்பு ஆங்கிலத் தினசரிகளான டெயிலி மிறர், ஃ பைனான்சியல் ரைம்ஸ் ஆகியவற்றில் வாரம் ஒரு தடவை அரசியல் பத்திகளை எழுதிவந்தார்.

ஜெயராஜின் இரு மொழிப்புலமை அவரை சமூகங்களுக்கு இடையில் தவிர்க்க முடியாத பாலமாகச் செயல்பட வைத்தது. அவரால் தமிழர் அரசியலின் சிக்கலான உள்போக்குகளை ஆங்கிலம் பேசும் உலகிற்கும் சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்துக்கும் விளக்கி எழுத முடிந்த அதேவேளை, தனது சமூகத்துடன் இயல்பான, ஆழமான பிணைப்பையும் பேண முடிந்தது. பக்கச் சார்பான கதையாடல்களுக்கு இணங்க மறுத்ததால் இலங்கை இனமோதலின் முக்கியமான சகல தரப்புகளினதும் விரோதத்துக்கு அவர் முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

தமிழ்த் தேசியவாதத்தின் மீதான ஜெயராஜின் பற்றுதல் ஆழமானது. ஆனால், அது குருட்டுத்தனமானதும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதுமான ஆயுதப்போராட்டப் போக்கைக் கொண்டிராமல், ஜனநாயக ரீதியான மனிதநேயப் பார்வையினால் வரையறுக்கப்பட்டிருந்தது. தமிழர்கள் மத்தியில் ஜனநாயக அடிப்படையிலான மாற்றுக் கருத்துக்களுக்கு இடமளிக்க ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்கள் மறுத்தபோது இறுதியில் அத்தகைய போக்கு அந்தச் சமூகத்தை வரலாற்றுப் பேரழிவுக்கு இட்டுச்செல்லும் என்பதை ஜெயராஜ் முன்கூட்டியே உணர்ந்து தனது எழுத்துக்களின் மூலம் எச்சரிக்கை செய்திருந்தார்.

போரின் முடிவுக்கு பின்னரான காலப் பகுதியில் மாயைகளுக்கு எதிராக இடையறாது எழுதியதன் மூலமாக தமிழ் மக்களுக்கான தனது கடமையை அவர் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.

அண்மையில் யாழ்நகரில் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் "சமஷ்டி முறையும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான பாதையும்" என்ற தலைப்பில் நிகழ்த்திய தந்தை செல்வா நினைவுப் பேருரை தொடர்பாக கடந்த வாரம் ஃ பைனான்சியல் ரைம்ஸ் பத்திரிகையில் எழுதிய அரசியல் ஆய்வாளரும் முன்னாள் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜெயதிலக, ஜெயராஜை பற்றிய ஒரு குறிப்புடனேயே கட்டுரையை தொடங்கி னார்.

"மற்றொரு மேன்மையான மனிதர் விடைபெற்று விட்டார். மேர்வின் டி சில்வாவினால் 'தவிர்க்க முடியாத வாசிப்புக்குரியவர்" என்று குறிப்பிடப்பட்ட வலிமையான சுதந்திர சிந்தனை கொண்ட சிறந்த ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் தனது 72 வது வயதில் கனடாவில் காலமானார்.

"மேர்வினைப் போன்றே டி. பி.எஸ்.ஸின் இறுதி ஆக்கமும் (பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கத்தின் சுயசரிதை நூல் பற்றிய விமர்சனம்) அவரது மரணச்செய்தி வெளிவரத் தொடங்கிய அதே நேரத்தில் இலங்கையில் பத்திரிகைகளில் வெளி வந்தது.

"போர்க்காலத்திலும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் 'உண்மையான கதையை" அறிந்துகொள்ள வாசகர்கள் அவரையே நம்பியிருந்தனர். டேவிட் ஜெயராஜ் ஆழமான பின்னணித் தகவல்களுடன் கூடிய 'உள்வீட்டுக் கதைகளை' எழுதினார். கடந்த நான்கு தசாப்தகால இலங்கை ஆங்கில ஊடகத்துறையில் அவரை விடவும் துல்லியமான உண்மைகளுடனும் சுவாரசியமாகவும் ஒரு அரசியல் அல்லது இராணுவக் கதையை தொகுத்து வழங்கியவர் வேறு எவருமில்லை.

"அவரது சிறந்த எழுத்துக்களின் தொகுப்பு சமகால இலங்கை வரலாற்றின் கையேடாகவும் இளம் ஊடகவியலாளர்களுக்கான பாடப் புத்தகமாகவும் பிரசுரிக்கப்பட வேண்டும்" என்று தயான் குறிப்பிட்டிருந்தார்.

1980 களின் பிற்பகுதியில் ' தி இந்து" வின் கொழும்பு செய்தியாளராக ஜெயராஜ் இருந்தார். இன்று அந்த பத்திரிகையின் கொழும்பு செய்தியாளராக பணியாற்றும் மீரா சிறினிவாசன் ஜெயராஜ் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

" மூத்த பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜின் மறைவைத் தொடர்ந்து பாக்கு நீரிணையின் இருமருங்கிலுமிருந்து அஞ்சலிகளும் இரங்கல் செய்திகளும் வந்து கொண்டிருக்கின்றன. இது இந்தியாவில் உள்ள இலங்கை அவதானிகள் மத்தியிலும் இலங்கையின் நீண்டகாலப் போரையும் அதன் பின்னணியையும் புரிந்துகொள்ள முயலும் இலங்கையர்கள் மத்தியிலும் அவர் கொண்டிருந்த அசாதாரண செல்வாக்கை பிரதிபலிக்கிறது.

"ஜெயராஜின் கருத்துக்கள் அரசாங்கத்திடமிருந்து மாத்திரமல்ல, போரைப் பற்றிய தங்களது சொந்தப் பார்வைகளுக்கு சவாலாக அமைந்த கருத்துக்களால் அசௌகரியமடைந்த தமிழ்ச் சமூகத்தின் சில பிரிவினரிடமிருந்தும் எதிர்வினைகளைக் கிளப்பியது. 'தி இந்து' நாளிதழுக்கு அவர் வழங்கிய முக்கிய பங்களிப்பு குறித்து எனது ஆசிரியர்கள் மற்றும் மூத்த சக ஊழியர்கள் மூலம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 2013 ஆண்டில் ஜெயராஜ் கொழும்பு வந்த சந்தர்ப்பத்தில் முதற்தடவையாக அவரைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள், பாதுகாப்புத்துறைகளில் அவர் கொண்டிருந்த பரந்த தகவல் தொடர்பாளர்களின் வலையமைப்பைக் கண்டு நானும் வியந்தேன்.

"அரசியல் தலைவர்கள் குறித்து அவர் எழுதிய வாழ்க்கை வரலாற்றுப் பாணியிலான நீண்ட கட்டுரைகளை நான் விசேடமாகப் பாராட்டினேன். கடந்த வருடங்களில் ஜெயராஜின் சில நிலைப்பாடுகளுடன் உடன்படாத பல வாசகர்களை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால், அந்த கருத்து வேறுபாடுகளின் காரணமாக அவரை வாசிப்பதை நிறுத்திய எவரையும் நான் சந்தித்தது அரிது.

"பத்திரிகைத்துறை என்பது பெரும்பாலும் 'வரலாற்றின் முதல் வரைவு' என்று விபரிக்கப்படுகிறது. இலங்கையின் அரசியல் வரலாற்றை அதன் அனைத்து சிக்கல்களுடனும் புரிந்துகொள்ள விரும்பும் எவருக்கும் டி.பி.எஸ்.ஸின் எழுத்துக்கள் ஒரு தவிர்க்க முடியாத வரைவாகவும் பெறுமதிமிக்கதொரு களஞ்சியமாகவும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்."

ஜெயராஜ் எழுதிய பகுப்பாய்வுக் கட்டுரைகளும் ஆளுமைகளின் சுயசரிதையும் அனுவமிக்க ஒரு செய்தியாளரின் புலனாய்வுத் திறனும் வரலாற்றாசிரியர் ஒருவரின் நுணுக்கமான பார்வையும் இணைந்த ஒரு " கலைவடிவமாக" அமைந்திருந்தன. அவரின் மறைவு இலங்கை இதழியலில் தமிழ்த் தேசியப் போராட்ட ஆவணப்படுத்தலின் ஒரு சகாப்தத்தைக் குறித்து நிற்கிறது.

தன்னுடன் சுமார் அரை நூற்றாண்டு கால நெருங்கிய நட்புறவைக் கொண்ட இந்த கட்டுரையாளர் கடந்தவாரம் வெளியிட்ட ' பத்திரிகைத்துறையில் என் கதை' என்ற நூலுக்கு எழுதிய முகவுரையே ஜெயராஜ் கடுமையாக சுகவீனமடைவதற்கு முன்னதாக இறுதியாக எழுதியதாகும்.

சென்றுவாருங்கள் டி.பி.எஸ். வளமான உங்கள் இதழியல் மரபு என்றும் எங்களுடன் இருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முன்னோக்கி நகர்வதற்கான நேரம் வந்துவிட்டது!



கலாநிதி ஜெகான் பெரேரா

காலம் காயங்களை சிறப்பாக குணப்படுத்தும் என்று கூறப்படுகிறது. ஆனால், காலத்தால் ஆற்ற முடியாத சில காயங்களும் இருக்கின்றன. அவற்றுக்கு குறிப்பான கவனம் செலுத்திச் சிகிச்சை அளிக்க வேண்டிய தேவை அவசியமாகிறது.

இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தத்தின் இறுதி இரண்டு நாட்களான மே 18, 19 ஆகிய திகதிகள், முன்னரை விடவும் இப்போது மக்களின் மனதில் குறைவாகவே நினைவிருக்கலாம்.

ஆனால், போரினால் ஏற்பட்ட சிகிச்சையளிக்கப்படாத, ஆறாத காயங்களின் தொடர்ச்சியை, இந்த நாட்களில் தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு கூடும் பல குழுக்களில் காண முடிகிறது. கொழும்பில், பாதிக்கப்பட்ட குடும்பங்களும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த அர்ப்பணிப்புள்ள ஆர்வலர்களும் வெள்ளவத்தை பகுதியில் ஒன்றுகூடி விளக்கேற்றினர். இந்த ஒன்றுகூடல்கள், போரின் காயங்கள் இன்னும் குணமடையாமல், சிகிச்சையளிக்கப்படாமல் இருக்கின்றன என்பதற்கான ஒரு அரசியல் ரீதியான வெளிப்பாடாகும்.

மே 18, 19 திகதிகளின் முக்கிய அம்சங்களில் ஒன்று, தமிழ், சிங்களக் குழுக்களால் எடுக்கப்பட்ட முற்றிலும் முரணான நிலைப்பாடுகளாகும். தமிழ்க் குழுக்கள் போரில், குறிப்பாக இறுதிச் சமர்களில் உயிரிழந்தவர்களை மே 18 அன்று நினைவு கூர்ந்து துக்கம் அனுஷ்டிக்கின்றனர் அதே வேளை, பல சிங்களவர்கள் மே 19 அன்று இராணுவ வெற்றியைக் கொண்டாடுகிறார்கள். 2015 ஆம் ஆண்டிலிருந்து, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் போரின் முடிவை மிகவும் நுணுக்கமான முறையில் கையாண்டதன் காரணமாக இந்த பதற்றங்கள் குறைந்துள்ளன.

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கங்களின் போது இது குறிப்பாகக் காணப்பட்டது, மேலும் இப்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திலும் இது உண்மையாகியுள்ளது.

அரசாங்கத்திற்கும் இன, மத சிறுபான்மை சமூகங்களுக்கும் இடையிலான துருவமுனைப்பு உணர்வைக் குறைக்க தற்போதைய அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அனைத்து குடிமக்களையும் சமமாக நடத்துவதாகவும் எந்த வடிவத்திலும் தீவிரவாதத்தை ஆதரிக்கப் போவதில்லை என்றும் அரசாங்கம் வலியுறுத்துவது, கடந்த காலத்தில் தங்களை ஒதுக்கப்பட்டவர்களாகவும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்பட்டவர்களாகவும் உணர்ந்த சிறுபான்மையினரால் பாராட்டப்படுகிறது.

ஆனால், முன்னைய அரசாங்கங்களை விடவும் சிறந்தது என்பதற்காகவே தற்போதைய அரசாங்கம் தனது சாதனைகளில் திருப்தியடைந்து சும்மா இருந்துவிட முடியாது. கடந்த காலக் காயங்களை ஆற்றுவதற்கு அது குறிப்பான கவனத்தை செலுத்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அடையாளபூர்வமான சமிக்ஞைகளும் சகல சமூகங்களையும் அரவணைக்கக்கூடிய சொல்லாடல்களும் முக்கியமானவை, ஆனால் அவை ஒரு நீண்டகால இன மோதலின் விளைவுகளைக் கையாளுவதற்குத் தனித்து போதுமானவை அல்ல.

தீர்க் கப்படாத பிரச்சினைகள் எவை என்பது நன்கு தெரிந்ததே. அவை ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மீண்டும் மீண்டும் வெளிப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில், நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் உள்ளிட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கு அழைப்பு விடுத்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30-1 தீர்மானத்தை இலங்கை இணை அனுசரணை செய்தது.

இந்தத் தீர்மானமும் இதற்கு முன்னைய தீர்மானங்களும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கோரிக்கைகளில் இருந்து உருவானவை என்பதுடன் சர்வதேச மனித உரிமை சமூகத்தினரிடையே எதிரொலித்தவையுமாகும். காணாமல் போனோர், பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள், குடிமக்களின் காணிகளில் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் போர்க்கால மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் ஆகிய பிரச்னைகள் இதில் அடங்கும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ், தமிழ் மக்கள் போரில் இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகளில் பெருமளவில் கலந்துகொள்ள முடியும் என்று உணர்ந்துள்ளனர். இது நாடு நல்லிணக்கத்தை நோக்கிய திசையில் மாறிக் கொண்டிருக்கிறது என்பதற்கான சான்றாகும். அரச நிறுவனங்களும் இந்தச் செயல்பாட்டில் ஒத்துழைத்து, நினைவு கூரலுக்கு உகந்த சூழலை உருவாக்கியுள்ளன.

போர் முடிவடைந்து 17 ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், அரசாங்கம் இந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நேர்மையான விருப்பத்தைக் கொண்டிருப்பது போன்று தோன்றினாலும், அதன் அடையாளபூர்வ பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. உண்மையில், அரசாங்கம் இந்த சவால்களை எதிர்கொள்வதற்காகத் தனது மிகவும் தகுதியான தலைவர்களை நியமித்துள்ளது.

ஜனாதிபதி திஸாநாயக்கவே பிரிவினையை விட ஒற்றுமையை வலியுறுத்தும் உரைகளின் மூலம் பொதுமக்களின் சிந்தனையை மறுவடிவமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளார். நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, காணாமல் போனோர், இழப்பீடுகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நிறுவனங்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ளார்.

சபை முதல்வர் பிமல் இரத்நாயக்கவிடம் வடக்கில் பொருளாதார அபிவிருத்தியை முடுக்கி விடும் பொறுப்பு



**முன்னைய அரசாங்கங்களை விடவும் சிறந்தது என்பதற்காகவே தற்போதைய அரசாங்கம் தனது சாதனைகளில் திருப்தியடைந்து சும்மா இருந்துவிட முடியாது. கடந்த காலக் காயங்களை ஆற்றுவதற்கு அது குறிப்பான கவனத்தை செலுத்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.**

ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி இன்றியமையாதது. வடக்கு , கிழக்கிற்கு முதலீடுகள், வேலைவாய்ப்புகள், உள்கட்டமைப்பு மற்றும் இளைஞர்களுக்கான வாய்ப்புகள் தேவைப்படுகின்றன. வறுமையும் வேலைவாய்பின்மைமையும் அனைத்து சமூகங்களையும் பாதிக்கிறது, மேலும் அபிவிருத்தி தாங்கள் ஒதுக்கப்படுவதாக சமூகங்கள் உணருவதைக் குறைக்கும். ஆனால் பொருளாதார அபிவிருத்தி மட்டுமே இன மோதலின் ஆழமான வேர்களைத் தீர்த்துவிட முடியாது.

நீண்டகால இன மோதல்கள் பொருளாதாரக் குறைகளால் மட்டுமே ஏற்படுவதில்லை. அவை அடையாளம், கண்ணியம், வரலாற்று நினைவு மற்றும் அரசியல் அதிகாரம் சார்ந்தவையாகும். இங்குதான் இலங்கையின் பல அரசாங்கங்கள் தோல்வியடைந்துள்ளன. வேகமான அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள், கட்டிடங்கள் மற்றும் முதலீடுகள் பல தசாப்த கால அவநம்பிக்கையை போக்க போதுமானது என்று நம்பின.

ஆனால் அரசியல் ரீதியாக ஒதுக்கப்பட்டதாக உணரும் சமூகங்கள், வீதிகள் அமைக்கப்படுவதாலோ அல்லது சந்தைகள் விரிவடைவதாலோ தங்களது அபிலாசைகளை அப்படியே கைவிட்டு விடுவதில்லை. மனிதர்கள் தாங்கள் யார் என்பதற்கான அங்கீகாரத்தையும் தங்கள் வாழ்க்கையை நிருவகிக்கும் முடிவுகளில் அர்த்தமுள்ள பங்கையும் நாடுகிறார்கள். மொழி குறிப்பாக முக்கியமானது. தமிழ்ப் பெரும்பான்மை மாவட்டங்களில், பிரதேச செயலகங்கள் இன்னும் சிங்களம் மட்டுமே பேசும் ஊழியர்களையே பணியில் அமர்த்திக் கொண்டிருக்கின்றன. இது தமிழ் பேசுபவர்களுக்கு அரசாங்கத்துடனான தங்கள் கொடுக்கல் வாங்கல்களில் தாங்கள் சிங்களவர்களுக்கு சமமானவர்கள் அல்ல என்பதைத் தொடர்ந்து நினைவூட்டுகிறது.

பிளவுபட்ட சமூகங்கள் குறித்த கல்வித்துறை ஆராய்ச்சிகள், அரசியலமைப்பு ஏற்பாடுகள் மோதலை தீவிரப்படுத்தலாம் அல்லது குறைக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. பெல்ஜியம், வட அயர்லாந்து போன்ற நாடுகள், வெவ்வேறு அடையாளங்களைக் கொண்ட சமூகங்கள் ஒரு பொதுவான நாட்டிற்குள் அமைதியாக ஒன்றிணைந்து வாழ்வதற்கு அதிகாரப் பகிர்வு முறைகள் எவ்வாறு வழிவகுத்தன என்பதற்கான உதாரணங்களை வழங்குகின்றன.

வட அயர்லாந்தில், ஒரு தரப்பை நிரந்தரமாக அடிபணிய வைக்காமல், இரு சமூகங்களுக்கும் ஆட்சியில் உத்தரவாதமான பங்கை அரசியல் நிறுவனங்கள் உறுதி செய்தபோதுதான் அமைதி நிலைத்திருக்க முடிந்தது. இலங்கையின் சொந்த அரசியல் சீர்திருத்த முயற்சிகள், 13வது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் மாகாண சபை முறையின் மூலம் பிராந்திய அதிகாரப் பகிர்வை நோக்கியே பெரும்பாலும் கவனம் செலுத்தியுள்ளன.

எனவே, மாகாண சபை தேர்தல்கள் இந்த ஆண்டு நடத்தப்படும் என்று அரசாங்கத் தலைமை தற்போது கூறி வருவது சாதகமானதொரு முன்னேற்றமாகும். இது பல வருட தாமதத்துக்கும் அலட்சியத்திற்கும் பிறகு மாகாண மட்டத்தில் ஜனநாயகப் பங்களிப்பை மீட்டெடுக்கும். இருப்பினும், சீர்திருத்தங்கள் இன்னும் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

மாகாண சபைகள் போதிய அதிகாரங்கள் மற்றும் நிதிகள் இல்லாத பலவீனமான நிறுவனங்களாகவே இருந்து வருகின்றன. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் 13வது திருத்தத்தின் விதிகளையும் குறிப்பாக, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்த தயக்கம் காட்டி வந்திருக்கின்றன. மொழிச் சட்டம் உள்ளிட்ட இந்தச் சட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் உட்பட அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் தயக்கம் அல்லது இயலாமை, அதிகாரப் பகிர்வு பற்றிய வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றனவே தவிர அவை ஒருபோதும் நேர்மையாக அமல்படுத்தப்படுவதில்லை என்ற சிறுபான்மையினரின் எண்ணத்தை வலுப்படுத்தியுள்ளது.

எனவே, இலங்கைக்கான ஒரு புதிய தேசியக் கோட்பாடு வெறுமனே இனவாதம் இல்லாத தன்மையையும் பொருளாதார அபிவிருத்தியையும் தாண்டிச் செல்ல வேண்டும். உண்மையான நல்லிணக்கத்துக்கு பன்முகத் தன்மையை ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்காமல், ஒரு ஐக்கியப்பட்ட, அமைதியான நாட்டின் அடித்தளமாக ஏற்றுக் கொளும் அணுகுமுறை அவசியமாகிறது.

அதிகாரப் பகிர்வை அழுத்தத்தின் கீழ் பெறப்பட்ட ஒரு சலுகையாகப் பார்க்கக் கூடாது. அது ஒரு பன்மைத்துவ சமூகத்தில் ஜனநாயகத் தேவையாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு மற்றும் தமிழ் மொழி பேசுபவர்களுக்குச் சம உரிமைகளை வழங்குவதன் நோக்கம் பிரிவினை அல்ல, மாறாக, சகல சமூகங்களையும் அரவணைப்பதேயாகும். அது அனைத்து சமூகங்களுக்கும் அரசில் ஒரு பங்களிப்பை வழங்குவதுடன் அரசியல் அதிகாரம் நிரந்தரமாக ஒரே ஒரு சமூகத்தின் கைகளில் மட்டுமே இருக்கும் என்ற அச்சத்தைக் குறைக்கிறது.

இலங்கையில் கடந்த காலத்தில் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க 1957 ஆம் ஆண்டின் பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு முயன்றார். இன்று அரசியல் சூழல் மற்றொரு வாய்ப்பை வழங்குகிறது. பல வருடங்களாக அரசியலில் ஆதிக்கம் செலுத்திய தேசியவாத சக்திகள், ஊழல், பொருளாதார வீழ்ச்சி, தவறான நிருவாகம் ஆகியவற்றின் காரணமாகத் தங்கள் நம்பகத்தன்மையை இழந்துள்ளன.

ஆனால், அவர்கள் சரியானதைச் செய்த இடங்களில் அவர்கள் நேர்மறையாக நினைவு கூரப்படுகிறார்கள் - உதாரணமாக, மறைந்த தோட்டத் தொழில்துறை மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லோஹான் ரத்வத்த, மட்டக்களப்பில் தமிழ் கால்நடை வளர்ப்பாளர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, அவர்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்காக ஒரு தமிழ் அதிகாரியை நியமித்ததற்காக இன்றும் அங்கு நன்றியுடன் நினைவு கூரப்படுகிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜனாதிபதி அநுர குமர தலைமையில் தேசிய மக்கள் சக்தி உருவாக்கும் புதிய அரசியல் கூட்டணி?

பனங்காட்டான்

தமிழக அரசியல் என்று எழுத ஆரம்பிக்கும்போது தி.மு.க., அ.தி.மு.க. என்று எழுதிப் பழக்கப்பட்ட கைகளுக்கு இப்போது த.வெ.க எனப் பயிற்சி கொடுக்க வேண்டியுள்ளது.

நடிகர் விஜய் தலைமையிலான புதிய அரசு பதவியேற்பைத் தொடர்ந்து அவரது தலைமையில் மதச்சார்பற்ற கூட்டணி ஆட்சி பீடம் ஏறி ஒரு வாரமாகிவிட்டது. மதச்சார்பற்ற கூட்டணி என்பதை சில காலமாக தொடர்ந்து கூறிவந்தது தி.மு.க தான்.

விஜய்யின் தமிழக வெற்றி கழகம் (த.வெ.க) தனித்து ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கை அதன் உயர்மட்டத்தில் சிலருக்கு இருந்த பொழுதிலும், பொது மக்கள் தரப்பில் பெருமளவு இருக்கவில்லை. 234 உறுப்பினர்களைக் கொண்ட சட்டப்பேரவையில் த.வெ.க. 118 ஆசனங்களை தனித்துப் பெறுமென எவரும் உறுதிபடக் கூறவில்லை.

இதன் மாநாடு விழுப்புரத்திலுள்ள விக்கிரவாண்டியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது. இதில் விஜய் உரையாற்றும்போது - 2026 தேர்தலில் எமக்குத் தனிப்பெரும்பான்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டு. எனினும், எம்மோடு கூட்டணி வைப்பவர்களுக்கு ஆட்சியில் பங்கும் அதிகாரத்தில் பங்கும் கொடுப்போம் என்று கூறியிருந்தார்.


அன்று கூறியவாறு இன்று கூட்டணி ஆட்சியையே தமிழகத்தில் அவர் அமைத்துள்ளார். தி.மு.க.வின் பங்காளிகளாகவிருந்து வந்த காங்கிரஸ் கட்சி, ஆட்சியில் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்ற தனது விருப்பத்தை தேர்தலுக்கு முன்னராகவே கூறி வந்தது. ஐந்து இடங்களை மட்டும் தேர்தலில் பெற்ற காங்கிரஸ், தேர்தல் முடிவுகள் வெளிவர ஆரம்பித்தபோதே த.வெ.க.வுடன் கூட்டுச் சேரும் ஆட்சிப் பங்கை வெளிப்படுத்தியது.

இதனைப் பொறுக்க முடியாத தி.மு.க. தலைவர் ஸ்டாலின், காங்கிரஸ் தனது பிறவிக் குணத்தை காட்டிவிட்டதென்று குமுறினார். அதேசமயம் காங்கிரஸ் கோரிய ஆட்சியில் அதிகாரப் பங்குக்கு குரல் கொடுத்த தனது மற்றொரு பங்காளியான விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவனை குற்றம் கூறவில்லை.

காங்கிரஸ் கட்சி தமிழக ஆட்சியில் பங்கு கேட்பதில் தவறில்லை என்று திருமாவளவன் தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே (பெப்ரவரியில்) கூறிய போதிலும் ஸ்டாலின் அதை கண்டுகொண்டதாக காட்டவில்லை. தேர்தலில் 108 ஆசனங்களை மட்டுமே பெற்ற த.வெ.க. ஆட்சியமைக்க மேலும் 10 எண்ணிக்கை தேவைப்பட்டபோது தி.மு.க. கூட்டணியின் ஐந்து கட்சிகள் ஆதரவு வழங்க முன்வந்தன. அப்போது ஸ்டாலினுக்கு எதுவும் செய்ய முடியவில்லை.

காங்கிரஸின் முடிவு அதன் தனித்துவமானது. இது தவிர, கம்யுனிஸ்ட், முஸ்லிம் லீக் ஆகியவை வழங்கிய ஆதரவு மதச்சார்பின்மையான ஆட்சியமைக்க விஜயுக்கு உதவியது. தமிழகத்தில் ஆளுனர் ஆட்சி அமைய இடமளிக்கக் கூடாது என்பதற்காகவே தமது கட்சி த.வெ.க.வுக்கு உதவுவதாக திருமாவளவன் தெரிவித்திருந்தார்.

அதேசமயம், அ.தி.மு.கவின் ஒரு பிரிவு த.வெ.க. ஆட்சியமைக்க ஆதரவு அளித்ததுவே நிகழ்கால தமிழக அரசியலில் ஏற்பட்ட எதிர்பாராத திருப்பம். இவர்களில் 25 பேரின் ஆதரவுடன் 144 எண்ணிக்கையை எட்டிய த.வெ.க. இப்போது ஆட்சிக் கதிரையில் அமர்ந்துள்ளது. இவ்வாறு குறிப்பிடுவதால் த.வெ.க. ஆட்சியை எவராலும் அகற்ற முடியாது என்றோ, தனது பதவிக் காலத்தை முழுமையாக இது தக்க வைத்துக் கொள்ளுமென்றோ கூற முடியாது.



> தமிழக தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றிய த.வெ.க. விஜய் மிகச்சிரமப்பட்டு மதச்சார்பற்ற கூட்டணியை உருவாக்கியுள்ளார். இலங்கையில் தையிட்டி, வெடுக்குநாறிமலை என்ற பெயர்களில் மதச்சார்பு ஆட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் அநுர குமர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஓர் அரசியல் கூட்டணியை உருவாக்கப் போவதாக செய்திகள் கூறுகின்றன. இது மதச்சார்பு சோசலிஸ கூட்டணியாகுமா?

இதனை எழுதும்போது, தமிழகத்தில் ஒரு காலத்தில் மிகப் பிரபலமாக வெளிவந்த துக்ளக் சஞ்சிகையின் ஆசிரியர் சோ, வாசகர் ஒருவரின் கேள்விக்கு அளித்த பதில் நினைவுக்கு வருகிறது. தமிழகத்தில் பத்திரிகைகளை விடிகாலையில் தவறாது படிப்பவர்கள் உண்டா என்று ஒரு வாசகரின் கேள்வி அமைந்திருந்தது. தமிழ்நாட்டு அரசியல்வாதிகளே விடிகாலையில் முதலில் படிப்பவர்கள் என்று பதிலளித்த சோ, தாங்கள் இன்று எந்த அரசியல் கட்சியில் இருக்கின்றார் என்பதை தெரிந்து கொள்வதற்காகவே அவர்கள் விடிகாலையில் பத்திரிகைகளை படிக்க வேண்டியிருந்தது என்று யதார்த்தமாக விளக்கியிருந்தார்.

(இந்தக் கேள்வி பதில் பற்றி குறிப்பிட்டிருந்த இன்னொரு பத்திரிகையாளர், துக்ளக்கின் கேள்வியும் பதிலும் சோதான் என்று குறிப்பிட்டிருந்ததை இங்கே சுட்ட வேண்டும்).



எதுவானாலும், தமிழக அரசியல் கட்சிகளின் வளர்ச்சியும், அதன் தளர்ச்சியும் அக்கட்சியின் பிரதிநிதிகள் நடத்தும் பாய்ச்சலிலும் பதவி மோகத்திலும் தான் தங்கியுள்ளது என்பது பகிரங்கமானது.

த.வெ.க.வின் தலைவர் விஜய் முதலமைச்சர் பதவி ஏற்றிருப்பதை பாராட்டி அவருக்கு மஞ்சள் சால்வை சூட்டிய தி.மு.க. தலைவர் ஸ்டாலின் ஊடகங்கள் வாயிலாக தமது நிபந்தனையை வெளிப்படுத்தியுள்ளார். புதிய ஆட்சிக்கு எதிராக ஆறு மாதங்களுக்கு தமது கட்சி எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை. அதன் பின்னரே எங்கள் காய்களை நகர்த்துவோம் என்பதை மறைபொருளில் ஸ்டாலின் கூறியுள்ளார்.

ஆறு மாதங்களின் பின்னர் எவர் எவரை எங்கிருந்து அகற்றுவது, எவரோடு கூட்டுச் சேருவது, எவ்வாறு த.வெ.க. ஆட்சிக்கு நெருக்குவாரம் கொடுப்பது என்பதை பொறுத்திருந்து பார்க்குமாறு ஸ்டாலின் சுட்டியிருப்பதை இங்கு அவதானிக்க முடிகிறது. மதச்சார்பற்ற கூட்டணி என்ற கூட்டிலிருந்து இருபத்தைந்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேறினால் நிலைமை என்னவாகும் என்ற கேள்வி பலரிடம் உண்டு. தமிழக அரசியலில் 'பட்டியல் பிரிவு' என்று தமிழக ஊடகங்கள் வெளிப்படுத்தும் அணி உண்டு. இது சாதிய அடிப்படையிலான கட்சிகளின் பிரதிநிதிகளை வகைப்படுத்துவது.

த.வெ.க. வின் அமைச்சரவையில் தற்போது ஏழு பேர் மேற்சொன்ன பட்டியல் பிரிவைச் சேர்ந்தவர்கள். இதில் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வன்னிஅரசுவும் இணைந்துள்ளதால் இந்த எண்ணிக்கை எட்டாகியுள்ளது. விரைவில் இடம்பெறவுள்ள தமிழக உள்ளாட்சித் தேர்தலில் விஜய்யின் புதிய கூட்டணி பலமானதாக அமையுமென எதிர்வு கூறப்படுகிறது. இதற்கு ஏதுவாக 'பட்டியல் பிரிவு' சகல பிரதேசங்களிலும் வீச்சான பரப்புரையை மேற்கொண்டு வெற்றியை பெறுமென எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழகத்தில் மதச்சார்பற்ற ஆட்சி முன்னேற்றம் காணும் வேளையில், சோசலிஸ ஆட்சி புரியும் இடதுசாரிக் கொள்கையைக் கொண்ட ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் ஆட்சி மதசார்பு ஆட்சியை முன்னெடுத்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. எடுத்ததற்கெல்லாம் விகாராதிபதிகளின் ஆலோசனையை பெறுவதும், அவர்களின் வழிநடத்தலில் ஆட்சியை நீட்சி பெறச்செய்வதும் வெட்டவெளிச்சமாக காணப்படுகிறது.

தமிழரின் கலாசார தலைநகரான யாழ்ப்பாணத்தின் தையிட்டியில் ஒரு விகாரையை முன்னிறுத்தி இனவிரோதம் வளர்க்கப்பட்டு வருகிறது. தென்மராட்சியில் உள்ள நாவற்குழியில் அமைந்துள்ள விகாரையில் முறைகேடான சமூகச் சீரழிவு இடம்பெறுகிறது. தமிழரின் பூர்வீக வழிபாட்டு இடமான வெடுக்குநாறிமலையை பௌத்த பிரதேசமாக பிரகடனம் செய்யும் முன்னேற்பாடுகளில் தொல்பொருள் திணைக்களம் தீவிரமாக இயங்குகிறது.

ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பின் சர்வ அதிகார பௌத்த பிக்குவாக, மகிந்தவின் உத்தியோக பிரதிநிதியாக அரசியல் தர்பார் நடத்திய பௌத்த பிக்கு இப்போது அநுர குமர பக்கம் இணைந்துவிட்டதாக ஒரு செய்தி இந்த வாரம் ஊடகங்களில் கொட்டை எழுத்தில் வந்துள்ளது. ஓர் அட்டகாச மதகுருவுக்கும், அரசியலுக்கும் அப்படியொரு சம்பந்தம்?

சிங்கள தேசத்தில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அது மத ஆட்சி என்பதாகவே மாறிவிடும். பௌத்த விகாரைகள் ஆட்சியாளர்களுக்கு மட்டுமன்றி எதிர்க்கட்சியினருக்கும் அவர்களது கட்சிகளின் கிளைகளாக இயங்க ஆரம்பித்துவிடும். இதில் மட்டும் ராஜபக்சக்கள், பிரேமதாசக்கள், விக்கிரமசிங்கக்கள், ஜே.வி.பி.யினர் என்ற வேறுபாடு கிடையாது.

இது போதாதென்று அநுர குமர அரசும் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்கப் போவதாக மற்றொரு செய்தி வெளிவந்துள்ளது. மட்டக்களப்பில் அண்மையில் புதிய நூலகம் ஒன்றின் திறப்பு விழாவின்போது இடம்பெற்ற எதிர்பாராத நிகழ்வும், ஊடகங்களில் வெளிவந்த புகைப்படமும் இதனைத்தான் கூறுகின்றதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மே மாதம் - ஒரு பெரும் தவறும், ஒரு அரசியல் சகாப்தத்தின் முடிவும்!



-யதீந்திரா

இது பதினேழாவது மே மாதம். ஒரு காலத்தில், கார்த்திகை என்றாலே எழுச்சியின் பூரிப்பு என்றிருந்த நாட்கள் போய், இப்போது, அழிவின் விளைவுகளை எண்ணி ஆண்டுகள் தோறும் ஒப்பாரி வைக்கும் மாதமாக, ஒவ்வொரு மே மாதம் நம்மை சாதாரணமாக கடந்து செல்கின்றது. இங்கிருந்து எங்கு செல்வது என்று தெரியாமலேயே முள்ளிவாய்க்கால், நீதி, கஞ்சி என்னும் சொற்களுடன் சில நாட்கள் பரபரப்பாகி, அனைத்தும் சாதாரணமாகிவிடுகின்றது. இது போன்றதொரு மே மாதத்தில்தான் எல்லாமும் முடிந்து போனது - ஈழத் தமிழ் அரசியல் வரலாற்றின் இறுதி அத்தியாயம் முள்ளிவாய்க்காலில் பேரழிவானது. இந்தப் பேரழிவிற்கான விதையும் ஒரு மே மாதத்தில்தான் புதையுண்டது - அது தற்செயல்தான் ஆனால் அனைத்தும் எவ்வாறு தற்செயலானது என்பதுதான் விசித்திரம்.

அதே போன்று, இரத்தம் தோய்ந்த வரலாற்றிற்கு அடித்தளமிட்ட, 1976ம் ஆண்டு வட்டுக் கோட்டைத் தீர்மானமும் மே மாதத்தில்தான் நிகழ்ந்தது. ஈழத் தமிழர் மீது பரிவுணர்வு கொண்டிருந்த ஒரேயொரு வல்லரசான இந்தியாவின் இரக்கப் பார்வையை, ஈழத் தமிழர்கள் முற்றிலுமாக இழந்து போவதற்கான விதையும், ஒரு மே மாதம்தான் ஊன்றப் பட்டது. 1991. மே, 21ம் திகதி, தமிழ் நாட்டில் வைத்து, இந்தியாவின் முன்னாள் பிரதமரும், உலகின் செல்வாக்கு மிக்க தலைவர்களில் ஒருவருமான நேரு குடும்பத்தின் வாரிசான ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார். வரலாற்றை பின் நோக்கி பார்த்தால் இந்தக் கொலையுடன் ஈழத் தமிழர் அரசியலுக்கான புதை குழியும் தமிழர்களாலேயே தோண்டப்பட்டது. அதற்கு பொறுப்பான, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூன்று தசாப்தகால அரசியல் சகாப்தமும் 2009 மே மாதத்தில் முடிவுற்றது. - அது உண்மையிலேயே தற்செயலானதா - நாமொன்றும் அறியோம் பராபரமே!

இந்த சம்பவம் இடம்பெற்ற பின்னர், பிற்காலத்தில் புளொட் இயக்கத்தின் தலைவராக இருந்தவரும், தற்போது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் கூறிய ஒரு கூற்றை, இந்தியப் பத்திரிகையாளர் நாராயணசுவாமி, ராஜீவ் மறைவின் முப்பதாவது ஆண்டை நினைவு கூர்ந்து எழுதிய கட்டுரையில் பதிவு செய்திருந்தார். சித்தார்த்தன் கூறினாராம் - அதாவது, "நான் தயக்கமின்றிக் கூறுகின்றேன், பிரபாரனுக்கு ஏழரைச் சனி பிடித்துவிட்டது, அவர் உயிரோடு இருக்கும் வரையில், அந்தச் சனி அவரை விடப்போவதில்லை. சாஸ்திர நம்பிக்கையின் படி, ஒருவர் ஏழரைச் சனிக்கு ஆளானால், அது ஏழரை ஆண்டுகளில் முடிந்துவிடும் என்பது நம்பிக்கை. ராஜீவ் காந்தியின் கொலையின் விலை மிகவும் கடுமையாக இருக்கும் என்பதை சித்தார்த்தன் ஆழமாக உணர்ந்திருந்தார் என்றும் கட்டுரையாளர் குறிப்பிட்டிருக்கின்றார்.

பிற்காலங்களில் நான் தனிப்பட்ட ரீதியில் உரையாடிய சந்தர்ப்பத்திலும் கூட, சித்தார்த்தன் அவ்வாறுதான் குறிப்பிட்டார் - அதாவது, ராஜீவ் கொலையுடன், ஈழத் தமிழர் போராட்டம் வெற்றி பெற வாய்பிருக்கும் என்னும் நம்பிக்கை தனக்கு அற்றுப்போய்விட்டதாகக் கூறியிருந்தார். இவ்வாறான பார்வை வேறு பலரிடமும் இருந்தது, ஆனாலும் விடுதலைப் புலிகளின் இராணுவ வெற்றிகள், இந்த யதார்த்தத்தை மறைக்கும் திரையானது. ஆனால் 1991 மே மாதத்தில் தலைநீட்டிய சனி, 2009 மேமாதம் முள்ளிவாய்க்காலில் ருத்திர தாண்டவமாடி ஓய்திருந்தாலும் கூட, ஈழத் தமிழர் அரசியலைப் பீடித்திருந்த, அந்தச் சனியின் தாக்கம் இப்போதும் விடுவதாக இல்லை.

இந்தியாவின் அன்றைய அரசியல் முடிவுகளுக்கு பின்னால், அன்றிருந்த பனிப்போர் கால அரசியல் அச்சங்களும், அதன் பிராந்திய தாக்கங்களுமே பிரதான காரணங்களாக இருந்தன என்பது எந்தளவிற்கு உண்மையோ, அதேயளவிற்கு உண்மை, அவ்வாறான அச்சங்களை இந்திய மூலோபாய சமூகத்திற்கு வழங்கியதும் கூட, அன்றைய ஆட்சியாளராக இருந்தவரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனதான். இந்தியாவின் அன்றைய மூலோபாய கவலைகளை புறம்தள்ளி, முற்றிலும் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை மேற்கொண்டார். இதன் விளைவாகவே, இந்தியாவின் தலையீடுகள் நிகழ்ந்தன.

> **ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா தமிழ் நாட்டில் வைத்து கொல்லப்பட்டமையானது, ராஜீவ் காந்தி கொலைக்கான ஒத்திகையாகியது. 1991 மே 21இல், விதைக்கப்பட்டது 2009 மே மாதத்தில் அறுவடையானது.**

அன்றைய சூழலில், அவ்வாறானதொரு தலையீட்டைச் செய்வதைத் தவிர, புதுடில்லிக்கு வேறு தெரிவுகள் இருந்திருக்கவில்லை. 1982இல், அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகனின் அழைப்பில், பிரதமர் இந்திராகாந்தி, வாசிங்கடனுக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு அவர், தெரிவித்திருந்த கருத்துக்கள், இந்தியாவின் பிராந்திய முதன்மைவாத அணுகுமுறையை தெளிவாக முன்வைத்திருந்தது, அங்கு அவர் பதிவு செய்திருந்தார், ஒரு நாடு இன்னொரு நாட்டிற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவது ஒரு இலக்காக இருக்க முடியாது என்றே நான் நம்புகின்றேன், இதனையே எனது நாட்டிலும், எங்களுடைய அயல்நாடுகளிலும் ஏற்படுத்த முயற்சிக்கின்றேன் என்று குறிப்பிட்டிருந்தார். 1984இல், ஜே.ஆர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந்தார், அதற்கு முன்பதாக, சீனாவிற்கு விஜயம் செய்திருந்தார். சீனாவிடம் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான ஆயுத உதவிகளை கோரியிருந்தார். வாசிங்கடனில் வைத்து, அமெரிக்க குரல் நிறுவனத்தை இலங்கையில் அமைப்பது, திருகோணமலை கடற்படைத் தளத்தை, அமெரிக்க கடற்படை பயன்படுத்து தொடர்பான விடயங்களின் முன்னேற்றங்களை ஆராய்ந்தார். அத்துடன், பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாபிரிக்காவின் ஊடாக, ஹெலிகொப்டர்கள், ஆயுதங்களை பெறுவதற்கான உடன்பாடு தொடர்பிலும் உரையாடினார். இந்தியாவை எதிர்கொள்ளும் ஒரு உக்தியாகவே இவ்வாறான நகர்வுகளை மேற்கொண்டார்.

அமெரிக்க - சோவியத் இருதுருவ உலக ஒழுங்கில் இந்தியா அணிசாரா கொள்கையை உயர்த்திப் பிடிந்திருந்த நிலையில், அமெரிக்காவோ, பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருந்தது. இந்த நிலையில், இந்தியாவின் சுயவிருப்பத் தீர்மானங்களை முன்கொண்டு செல்ல வேண்டுமாயின், ஒரு மேலாதிக்க சக்தியின் ஆதரவு தேவைப்பட்டது. அன்றைய உலக ஒழுங்கில் அமெரிக்காவிற்கு மாற்று என்றால் அது சோவியத் யூனியன் மட்டும்தான். கிழக்கு பாகிஸ்தானை உடைக்கும் முயற்சியின் போது, அமெரிக்காவின் தலையீட்டை சமநிலைப்படுத்த வேண்டுமாயின் சோவியத் ஆதரவு தவிர்க்க முடியாதது என்பதே இந்தியாவின் அணுகுமுறையாக இருந்தது. இந்த அடிப்படையில் அன்றைய இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் சிக்கலான உறவே இருந்தது. 1971இல் பாகிஸ்தான் யுத்தம் இடம்பெறுவதற்கு முன்னதாக, இந்திராகாந்தி வாசிங்டனுக்கு விஜயம் செய்திருந்தார். ஆனாலும் இருதரப்பு போச்சுக்களில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இருக்கவில்லை. அப்போதைய அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் இன்னொரு பெயராக நோக்கப்பட்ட ஹென்றி கிஸ்ஸிங்கர், இந்திராகாந்தி தொடர்பிலும் இந்தியா தொடர்பிலும் மாறுபாடான பார்வைகளையே கொண்டிருந்தார். அப்போதைய ஜனாதிபதி நிக்சனுக்கும் கிஸ்ஸிங்கருக்கும் இடையிலான இரகசிய சம்பாசனைகள் பின்னர் கசிந்தது.

இந்திய-பாகிஸ்தான் யுத்தத்தின் போது, பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே நிக்சன் நிர்வாகம் மேற்கொண்டிருந்தது. இந்தியாவை அச்சுறுத்தும் நோக்கில், அமெரிக்கா அதன் சக்திவாய்ந்த 7வது கடற்படையை வங்காள விரிகுடாவிற்கு நகர்த்தியது. இந்தியா முதல் முதலாக ஒரு அனுவாயுத சக்தியை எதிர்கொள்ளும் நெருக்கடி ஏற்பட்டது. இந்தியர்கள் அடித்து வீழ்த்தப்பட வேண்டும் என்னும் நிக்சனின் வார்த்தைகள் பின்னர் அம்பலமானது. யஹ்யா கான் தலைமையிலான பாகிஸ்தான் வீழ்சியுற்றால், அமெரிக்காவின் சீனாவை நோக்கிய மூலோபாயம் சிக்கலுக்குள்ளாகலாம் என்பதே அமெரிக்காவின் பார்வையாக இருந்தது. இந்தியா மேற்கு பாகிஸ்தானுக்குள் நுழைந்தால் அப்போது ஏதாவது செய்வோம் என்பதே கிஸ்ஸிங்கரின் பதிலாக இருந்தது. அமெரிக்க நகர்வால் இந்திராகாந்தி பதட்டமடையவில்லை - பெரிய கப்பலை கொண்டு எங்களை அச்சுறுத்தலாம் என்று எண்ணுகின்றனர் என்னும் கூற்றுடன், யுத்தத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பதாக, சோவித் யூனியுடனும் அமைதி மற்றும் நட்புக்கான புதிய உடன்பாட்டில் கைச்சாத்திட்டார். இதன் மூலம், பாகிஸ்தானை உடைக்கும் நகர்வில் வெற்றிபெற்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், 1977இல், பெரும்பான்மை பலத்துடன் அதிகாரத்திற்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, கொழும்பின் அதுவரையான அணிசாரா வெளிவிவகார அணுகுமுறையிலிருந்து விலகி, அமெரிக்க சார்பு கொள்கையை நோக்கிச் சாய்ந்தார். இதன் விளைவாகவே புதுடில்லி கொழும்பு தொடர்பில் அதிருப்தியடைந்தது. கொழும்பின் அணுகுமுறைகளுக்கான பதிலாகவே தமிழ் ஆயுத அமைப்புக்களுக்கு பயிற்சியளிக்கும் தீர்மானத்தை இந்தியா மேற்கொண்டது. உண்மையில் கொழும்பின் அணுகுமுறைக்கு இந்தியா எதிர்வினையாற்றியது என்றே இதனை வரலாற்றுரீதியாக நோக்க வேண்டும்.

தமிழ் ஆயுத அமைப்புக்களுக்கு பயற்சியளித்தமை தொடர்பில், இப்போதும் தென்னிலங்கையில் அதிருப்தி வெளிப்படுவதுண்டு, ஈழத் தமிழர்களுக்காக இலங்கையை துண்டாட இந்தியா முற்பட்டதான அரசியல் பிரச்சாரங்கள் இப்போதும் ஆங்காங்கே கண்சிமிட்டுவதுண்டு. ஆனால் உண்மையோ வேறு, அன்றிருந்த அச்சமான அரசியல் சூழலில், தமிழ் ஆயுத இயக்கங்களை வேறு சக்திகள் பயன்படுத்திவிடக் கூடிய ஆபத்துக்களை உணர்ந்ததன் விளைவாகவே, இந்தியா அவர்களை தங்களுடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எண்ணியது. ஏனெனில் அப்போது, இங்கிலாந்தை தளமாகக் கொண்டியங்கிய ஈரோஸ் இயக்கத்தின் தலைவர்கள், பாலஸ்தீனத் தொடர்பை ஏற்படுத்தியிருந்தனர். அதன் ஊடாக ஏராளமான இயக்க உறுப்பினர்கள் பாலஸ்தீன பயற்சிக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு பயிற்சிக்காக செல்பவர்களை இந்தியாவிற்கு எதிரான சக்திகள் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பிருந்தது. இதனைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தியா அதன் அதுவரையான அமைதியை கலைத்தது. ஆனால் இலங்கையின் ஆள்புல ஒருமையை ஒரு போதும் உடைய விடக் கூடாது என்பதில் இந்திராகாந்தி உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

2010இல், அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராசம்பந்தனுடனான நேர்காணலின் போது, அவர் கூறியது, நாங்கள், இந்திரகாந்தியை சந்தித்து பேசிய சந்தர்ப்பத்தில், அவர் கூறினார், "பெரும்பான்மை மக்களின் மனதைப் புண்படுத்தாமல் உங்களுக்கு நான், ஒரு தீர்வை பெற்றுத் தருவேன்" இதனைக் கூறிவிட்டு, என்னைப் பார்த்து சம்பந்தன் அப்படியென்றால் என்ன தம்பி பொருள் என்றார்.

இந்தியாவின், இலங்கை தொடர்பான அன்றைய அணுகுமுறையை, அன்றைய அரசியல் சூழலிலிருந்தே புரிந்துகொள்ள வேண்டும். இந்திய பாகிஸ்தான் யுத்தத்திற்கு முன்பதாக, இந்திரா வழங்கிய நேர்காணல் ஒன்றில், பங்களாதேஷ் கெரிலாக்களை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா - நீங்கள் தனிநாட்டை ஆதரிக்கின்றீர்களா என்று கேட்ட போது - இந்திராவின் பதில் : இங்கு அதனை ஆதரிக்கின்றோமா அல்லது இல்லையா என்பது அல்ல இங்கு கேள்வி - இது போன்ற விடயங்கள் ஏன் நடக்கின்றன என்பதுதான் கேள்வி. எங்களுடைய அயல்நாடுகளில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் எங்களுடைய கண்களை முடிக்கொண்டிருக்க முடியுமென்று நான் எண்ணவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், கொழும்பின் அணுகுமுறைகள் இந்தியாவின் நேரடித் தலையீட்டுக்கு வழிவகுத்தது.

ஆனால் அவ்வாறான நேரடியான தலையீட்டின் போது கூட, இந்திராகாந்தியின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி, ஜி.பார்த்தசாரதி ஒரு விடயத்தை ஆயுத அமைப்புக்களின் தலைவர்களுக்கு தெளிவாக எடுத்துரைத்திருந்தார். அதாவது, உங்களுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பது, தனிநாட்டை பெற்றுத் தருவதற்காக அல்ல, இந்தியா ஒரு போதும் தனிநாட்டை ஆதரிக்காது அத்துடன் அனுமதிக்கவும் மாட்டாது. இதற்கு சாட்சியாக இப்போதும் சிலர் இருக்கின்றனர். ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் கௌரவமாக வாழக் கூடிய ஒரு அரசியல் ஏற்பாட்டைப் பெற்றுக் கொடுப்பதுதான் இந்தியாவின் நோக்கமாக இருந்தது - தமிழ் நாட்டை போன்றதொரு அதிகார அலகு. ஆனால் இதனை

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 17 ஆவது மே 18



நிலாந்தன்

## கூட்டுத் துக்கத்தை அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவது!

**நினைவுகளும் காயங்களும் அடுத்தகட்ட அரசியலைச் செலுத்தும் உணர்ச்சிகரமான, உணர்வுபூர்வமான உந்து விசையாக மாற்றப்பட வேண்டும் என்பது எல்லா அரசியல் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் தெரிகிறது. ஆனால் அதற்குரிய பொறிமுறை யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை.**



நண்பர் ஒருவர் சொன்னார் "கடந்த ஞாயிற்றுக்கிழமை, முள்ளிவாய்க்காலில், நினைவு கூரும் மைதானத்தில், ஒரு தாய் நிலத்தில் விழுந்து கதறி அழுகிறார். அவருடைய முகத்தை கண்ணீரோடு படம்பிடிப்பதற்காக ஒரு கமராக்காரர் தானும் நிலத்தில் தவழ்கிறார். அந்த நேரத்தில் இந்த மைதானத்தில் பெருகிய துக்கம் கண்ணீர் என்பவற்றின் பின்னணியில் அவர் படப்பிடிப்பில் காட்டிய ஆர்வம் நெருடலாக இருந்தது" என்று. கண்ணீரைப் படம்பிடிக்க வேண்டும். துக்கத்தை ஆவணப்படுத்த வேண்டும். ஆனால் இங்கு கண்ணீரும் துக்கமும் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தில் நினைவுகளைத் தலைமுறைகள் தோறும் கடத்தும் நோக்கத்தோடு சேகரிக்கப்படுகின்றனவா? அல்லது கண்ணீரையும் துக்கத்தையும் நினைவுகளையும் எப்படி கவர்ச்சியான "கொண்டென்ட்"-காணொளிக் கருவாக - அல்லது ஒளிப்படமாக மாற்றலாம் என்று சிந்தித்துப் படம் பிடிக்கப்படுகிறதா? என்ற பொருளில் அவர் கேள்வி எழுப்பினார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் துயிலும் இல்லங்கள் இருந்த காலங்களில், மாவீரர் நாளில் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மட்டும் படம் பிடிக்கலாம். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் கைபேசிப் பயன்பாடு பெருமளவுக்கு இருக்கவில்லை. இந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைப் போன்ற பெரிய இந்து கோவில்களுக்குள் கமராக்கள், கைபேசிகள் அனுமதிக்கப்படுவதில்லை. வத்திக்கானிலும் சில தேவாலயங்களில் அப்படித்தான். தாஜ்மஹால் போன்ற பல நினைவுச் சின்னங்கள் அமைந்திருக்கும் வளாகங்களில் படம் எடுப்பதற்கு வரையறைகள் உண்டு. அமெரிக்காவின் செப்டம்பர் 11 நினைவு வளாகத்தில் படம் பிடிக்க வரையறைகள் உண்டு. உலகின் ஒரு பகுதி நினைவிடங்கள், நினைவு வளாகங்கள், நினைவு நிகழ்வுகளில் தனிப்பட்ட தேவைகளுக்காகப் படம் எடுக்க அனுமதி உண்டு. வணிக நோக்கத்தோடு படம் எடுக்க முடியாது.

இந்தக் கட்டுப்பாடுகள் பாரம்பரிய கமராக்களுக்கு பொருந்தலாம். கைபேசிகளுக்கு முழுமையாகப் பொருந்துமா? பல ஆண்டுகளுக்கு முன் "கொழும்பு டெலிகிராபில்" ஒரு சிங்கள விமர்சகர் எழுதியிருந்தார் "மனிதன் இப்பொழுது நடமாடும் கமராவாக மாறிவிட்டான்" என்று. கைபேசிப் பயன்பாடு குறித்த ஒரு கட்டுரையில்தான் அவர் அவ்வாறு எழுதியிருந்தார். இதே முள்ளிவாய்க்காலில் 17 ஆண்டுகளுக்கு முன்பு சிறிலங்காவின் படைத்தரப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கைபேசிகளில் எடுத்த படங்கள்தான் இப்பொழுது உலக அரங்கில் அவர்களுக்கு எதிரான சான்றுகளாக மாறியிருக்கின்றன.

இன அழிப்பு, போர்க் குற்றம் தொடர்பான பல சான்றுகளில் அவ்வாறு படைத்தரப்பு எடுத்த படங்கள்தான் மேசையில் வைக்கப்படுகின்றன. போரின் இறுதிக் கட்டத்தில், மிகக்குறிப்பாக போர்க் களத்தில் இருந்து முழு மக்கள் தொகையும் வடித்து அகற்றப்பட்ட நாட்களில், தமிழ் கமராக்கள் இயங்கவில்லை. பலம் பொருந்திய நாடுகளின் செய்மதிக் கமராக்கள் இயங்கின. இவற்றுடன் களத்தில் நின்ற படை ஆட்களின் கமராக்கள் இயங்கின. வெற்றிக் களிப்பில் தன்னிலை மறந்த படைத்தரப்பினர் தமது சாகசச் செயல்கள் என்று கருதி படம்பிடித்த விடயங்கள்தான் இப்பொழுது குற்றச்செயல்களாக முன்வைக்கப்படுகின்றன. கைபேசியால் தன்னைத்தானே காட்டிக் கொடுத்த ஒரு நாடு.

மனிதர்கள் நடமாடும் கமராக்களாக மாறிவிட்ட ஒரு சூழலில், முள்ளிவாய்க்கால் நினைவு நாள் போன்ற பொது நிகழ்வுகளில், எதை எடுக்கலாம்? எதை எடுக்கக்கூடாது? என்ற கேள்வி நடைமுறைச் சாத்தியமானதா? அந்த நிகழ்வை ஒழுங்குபடுத்தும் ஏற்பாட்டுக் குழு அதனை ஏதோ ஓர் ஒழுங்கிற்குள் கொண்டு வர முடியுமா? பாரம்பரிய கமராக்களை அவர்கள் ஒழுங்குபடுத்தலாம். ஆனால் கைபேசிக் கமராக்களை ஒழுங்குபடுத்தலாமா? ஏனென்றால் இதுபோன்ற நிகழ்வுகளில் "கைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம், தன் படம் எடுக்க வேண்டாம், அந்த நிகழ்வின் புனிதத்தை, உளவியல் கனதியைக் குறைக்க வேண்டாம்".. என்று எவ்வளவுதான் வலியுறுத்தினாலும் அதைக் கட்டுப்படுத்த முடியாது. அதை கட்டுப்படுத்தும் ஆட்பலமும் சக்தியும் முள்ளிவாய்க்கால் ஏற்பாட்டுக் குழுவுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

துயிலும் இல்லங்களில், முள்ளிவாய்க்காலில், ஏனைய நினைவு கூரும் களங்களில் ஒரு பகுதியினர் துக்கத்தைக் கொட்டித் தீர்க்கிறார்கள். இன்னொரு பகுதியினர் அந்த கண்ணீரையும் துக்கத்தையும் ஆவணமாக்குகிறார்கள். அதில் ஒரு பகுதி அதனை காசு புரளும் காணொளிக் கருவாகப் பார்க்கிறது.

தனது சமூகத்தின் கண்ணீரை, காயங்களை அடுத்த தலைமுறைக்கு கடத்துவது என்பது அதனை காசாக்குவது அல்ல என்று விளங்கப்படுத்த முடியாத ஒரு தொழில்நுட்பச் சூழல் இது. நினைவு நாட்களுக்கு வரும் எல்லாருமே, குறிப்பாக இளைய தலைமுறை பெருமளவுக்கு இதுபோன்ற நிகழ்வுகளில் அந்த நிகழ்வின் அரசியல் அடர்த்தியை, கனதியை பண்பாட்டுப் புனிதத்தை விளங்கி அதில் சீரியஸாக கலந்து கொள்கிறது என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. அங்கு சிந்தப்படும் கண்ணீரையும் துக்கத்தையும் நீதிக்கான போராட்டத்தைச் செலுத்தும் விசையாக மாற்றவேண்டும் என்று, அங்கே கமராக்களோடு கைபேசிகளோடு காணப்படும் எல்லாருமே சிந்திப்பார்கள் என்றும் எடுத்துக் கொள்ளமுடியாது.

எனது நண்பராகிய ஒரு யூடியூப்பர் சொன்னார், இதுபோன்ற நிகழ்வுகளில் பலரும் படம் பிடிப்பார்கள். யார் அதனை டொலர்களை உழைக்கும் கொண்டெண்டாக பார்க்கிறார்கள்? யார் அதனை தலைமுறைகள் தோறும் நினைவுகளைக் கடத்தும் தேசியக் கடமையாகப் பார்க்கிறார்கள்? என்று பிரித்தறிவது கடினம் என்று. அங்கே வணிக நோக்கங்கள் இருந்தாலும், நினைவுகள் கடத்தப்படுகின்றன என்று கூறினார். மேலும் அவர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். கடந்த ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்காலை நோக்கிச் செல்லும்போது, பரந்தன் புதுக்குடியிருப்புச் சாலையில் பல்கலைக்கழக மாணவர்களின் மோட்டார் சைக்கிள் வாகன அணியை அவர் கடந்து சென்றிருக்கிறார், அந்த மோட்டார் சைக்கிள்களின் வரிசையைக் கடப்பதற்கு தனக்கு கிட்டத்தட்ட 10 நிமிடங்கள் எடுத்ததாகவும் சொன்னார்.

அந்த மோட்டார் சைக்கிள் அணியில் காணப்பட்ட மாணவர்கள் கறுப்பு ஆடைகளை அணிந்திருந்தார்கள். தலைகளில் கறுப்புப் பட்டிகளைக் கட்டியிருந்தார்கள். மோட்டார் சைக்கிள்களை அவர்கள் செலுத்திய விதத்தில் ஒருவித சாகச உணர்வு வெளிப்பட்டதைப் பலரும் சுட்டிக்காட்டுகிறார்கள். அந்தச் சாகச உணர்வு எங்கிருந்து வருகிறது? தமிழ் மக்களின் ஆயுத எதிர்ப்பு தோற்கடிக்கப்பட்ட ஒரு நாளை நினைவுகூரும் நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்லும்போது,தாங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை என்று காட்டுவதற்கு அவ்வாறு ஒரு சாகச உணர்வை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கலாம்.

ஆனால் அது சாகச உணவை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வு அல்ல. அதைவிட ஆழமான பொருளில் நினைவுகளை, கூட்டுக் காயங்களை, கூட்டுத் துக்கத்தை எப்படி கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவது என்று சிந்திக்கும் ஓர் அரசியல் செய்முறையின் பிரிக்கப்பட முடியாத ஒரு பகுதிதான் அந்த நிகழ்வு.

ஆனால் இளைய தலைமுறைக்கு யார் அதனை அவர்களுக்கு விளங்கும் மொழியில், அவர்களின் கைகளுக்குள் சுருக்கப்பட்டிருக்கும் ஒரு தொழில்நுட்பப் பரப்பிற்குள் எடுத்துக் கூறுவது?

இம்முறை முள்ளிவாய்க்காலில் கடந்த ஆண்டை விட மக்கள் தொகை அதிகம். நினைவு கூரும் மைதானத்தை நோக்கிச் செல்லும் பெருஞ் சாலையில் வாகனங்களின் நெரிசல் காரணமாக போக்குவரத்துத் தேங்கி நின்றது. வாகனங்களின் நீண்ட வரிசை. இது 17 ஆண்டுகளுக்கு முன் 2009 ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில், அந்த வீதியில் காணப்பட்ட காட்சிகளை இரை மீட்க உதவும். அப்பொழுது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஆயிரக்கணக்கானவர்கள் அந்த வழியூடாக இறுதிக்கட்ட யுத்த களத்தை நோக்கி வந்தார்கள். வாகனங்களும் மனிதர்களுமாக மணித்தியாலக் கணக்காக போக்குவரத்து இறுகிப்போய் நின்றது. 17 ஆண்டுகளின் பின் அந்த நினைவுகளை இரைமீட்கும் நிகழ்வுக்காக அதே காலப்பகுதியில், அதே வீதியில்,வாகனங்கள் வரிசையில் இறுகி நின்றன.

இம்முறை பல்கலைக்கழக மாணவர்கள் மட்டும் ஏழு பேருந்துகளில் சென்றிருந்தார்கள். அவர்களைப் போன்று இளையவர்கள் அதிகமாக வந்திருந்தார்கள். முன் சொன்னதுபோல மோட்டார் சைக்கிள் பேரணியும் வந்தது. அந்த நிகழ்வில், அந்த இடத்தில் தாங்கள் நிற்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தை, அரசியல் ஆக்க சக்தியாக மாற்ற வேண்டியது கட்சிகளுடைய வேலை. முள்ளிவாய்க்காலுக்கு வரும் இளையோர் அல்லது மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு வரும் இளையோர் அல்லது ஏனைய நினைவு கூரும் களங்களை நோக்கி வரும் இளையோர் அந்த நினைவுகளின் அரசியல் பெறுமதியை, கனதியை உணர்ந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கத் தேவை இல்லை. அவர்களுக்கு அந்த நினைவுகளின் பின்னால் இருக்கும் அரசியலை எடுத்துக்கூற வேண்டியது மூத்த தலைமுறையின் வேலை. கூட்டுத் துக்கத்தையும் கூட்டுக் காயங்களையும் தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டத்தைச் செலுத்தும் உந்துவிசையாக மாற்ற வேண்டும் என்று எடுத்துக்கூற வேண்டியது கட்சிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களின் கடமை. ஆனால் எத்தனை தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் பலமான இளையோர் அணி,மாணவர் அணி, மகளிர் அணி உண்டு?

நினைவுகளும் காயங்களும் அடுத்த கட்ட அரசியலைச் செலுத்தும் உணர்ச்சிகரமான, உணர்வுபூர்வமான உந்து விசையாக மாற்றப்பட வேண்டும் என்பது எல்லா அரசியல் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் தெரிகிறது. ஆனால் அதற்குரிய பொறிமுறை யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வெற்றிடம் உள்ளவரை நினைவு கூர்தலை ஒரு சடங்காக, சாகச அரசியலாகப் பார்க்கும் ஒரு போக்கும் இருக்கும். அந்தக் களத்தில் நிற்பதைத் நினைவுச் சுடரின் முன் மலர்களை வைப்பதைத் தன் படம் எடுத்து அல்லது படம் எடுத்து அதை ஒரு சான்றாக முன்வைக்கும் ஒரு தரப்பும்அங்கே வரும். அங்கு சிந்தப்படும் கண்ணீரை எப்படி கொண்டென்ட் ஆக மாற்றலாம் என்று சிந்திக்கும் யூடியூப்பர்களும் அங்கே வருவர். அவர்கள் அதனை வியாபாரமாகச் செய்தாலும் அதன் வழியே நினைவுகள் தலைமுறைகள் தோறும் கடத்தப்படும் என்பதுதான் இப்போதுள்ள யதார்த்தம். நினைவுகளை, கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் காயங்களை, கூட்டு அவமானத்தை, கூட்டு வலியை நீதிக்கான போராட்டத்தைச் செலுத்தும் உணர்ச்சிகரமான உந்து விசையாக மாற்றத் தேவையான பொருத்தமான அரசியல் தரிசனமும் கட்டமைப்பும் பொறிமுறையும் இல்லாதவரை நிலைமை இப்படித்தான் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒரு பத்திரிகையாளனின் புனிதம்!

மாலி


**கடந்த 17ஆம் தேதி கனடாவில் காலமான சிரேஷ்ட பத்திரிகையாளர் டி. பி. எஸ். ஜெயராஜின் இறுதிக் கிரியைகள் கனடாவில் இன்று நடைபெறுகின்றன.**

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரித்தாளும் இராஜதந்திர கொள்கையுடன் இலங்கை சுதந்திரமடைந்தது. அதிலிருந்து, அக் கொள்கையின் 'சுபீட்சம்' செழித்து மலரும் நாடாக இலங்கை இன்னமும் விளங்குகிறது. பெரும்பான்மை, சிறுபான்மை இன அடையாளங்களுடன் சுதந்திரத்தைப் பெற்ற இலங்கை, இனங்களுக்கிடையேயான இனப் பிரச்னையிலேயே சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறது.

1948இல் சுதந்திரத்தைப் பெற்ற இலங்கையின் இந்த இனப் பிரச்னையுடனான அரசியல் போக்கு 1970களிலிருந்து கொந்தளிப்படைய தொடங்கியது. அரசுக்கு எதிராக பெரும்பான்மை இனத்திலிருந்தே எழுந்த ஜேவிபி கிளர்ச்சி ஒருபுறமிருக்க, தங்களின் உரிமைகளுக்கான தமிழர்களின் சாத்வீக அரசியலும் இக் காலப்பகுதியில் தீவிரவாத பாதைக்கு திரும்பத் தலைப்பட்டது. அது, அடுத்த சுமார் மூன்று தசாப்த காலத்தை, உலகின் கவனத்தையே ஈர்த்த ஓர் உள்நாட்டு யுத்தத்துள் நாட்டைத் தள்ளியது. அப்போது உள்நாட்டிலும், பிராந்தியத்திலும், உலக அளவிலும் இலங்கை, செய்தித்துறை சார்ந்த முக்கியத்துவத்தை ஈர்த்தது.

ஆக, இலங்கைத் தமிழர்களின் அரசியல் சாத்வீக வழிமுறைகளிலிருந்து தீவிரவாத வழிமுறைக்கு மாறிய இந்த நிலைமாறு காலத்தில் டி. பி. எஸ். ஜெயராஜ் இலங்கையின் பத்திரிகைத் துறையுள் பிரவேசித்தார். யுத்தமும் முடிந்து, அதன் பின்னரும் பதினேழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இந்தக் காலப்பகுதி முழுவதையும் அளந்துவந்த ஒரே பத்திரிகையாளராக டி. பி. எஸ். ஜெயராஜ் திகழ்கிறார். இனப் பிரச்னை தொடர்பில் இக் காலப்பகுதியில் நிகழ்ந்த அனைத்து நிகழ்வுகளிலும் அந் நிகழ்வுகளையும் அவற்றின் பின்னணிகளையும் அவற்றின் சூத்திரதாரிகளையும் மற்றும் தொடர்பான அனைத்தையுமே ஒரு விவரண சித்திரமாக காண்பிக்கும் அவருடைய எழுத்து எல்லோரையுமே - எப்போதுமே ஒரு நிர்ப்பந்தமாய் ஈர்த்தது. செய்திகளின் முக்கியத்துவம் முனைப்படைந்த இக் காலம், பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் பலவிதத்திலான சவால்களையும் அச்சுறுதல்களையும் எதிர்கொண்ட காலமுமாகவிருந்தது. இந் நிலைமை வட பகுதியில் மாத்திரமன்றி, தென் பகுதியிலும் நிலவியது. 19 பத்திரிகையாளர்கள் இக் காலப்பகுதியில் கொல்லப்பட்டிருப்பதாக அதிகாரபூவமாக தெரிவிக்கப்படுகிறது. ஜேவிபியின் இரண்டாவது கிளர்ச்சியும் இதனிடையே இடம்பெற்றிருந்தது.





டி. பி. எஸ். ஜெயராஜ் அவருடைய எழுத்துக்களில் இலங்கையில் தமிழர்கள் எல்லோருக்கும் விருப்பமான ஒருவராக இருக்கவில்லை. அதில் ஆச்சரியப்படுவதற்கும் இல்லை. ஆனால், எப்போதும், எதிலும் அவர் என்ன எழுதுகிறார் என்பதை அறியும் ஓர் ஆவல் எல்லோரிடமுமே இருந்தது. அதுதான் 'டிபிஎஸ்' என்ற பத்திரிகையாளனின் தனித்த அடையாளம். இந்த அடையாளத்தை அவர் வாசகர்கள் மத்தியில் மாத்திரமல்ல, அரசுகளோ, அரசியல்வாதிகளோ, இராஜதந்திரிகளோ அல்லது ஏன், சக பத்திரிகையாளர்கள் மத்தியிலுமேகூட ஏற்படுத்தியிருந்தார்.

ஜெயராஜ் 1977இல் 'வீரகேசரி'யில் இணைந்தார். நான் 'ஈழநாடு' கொழும்பு அலுவலகத்தில் செய்திகளுக்கு பொறுப்பாகவிருந்தேன். அப்போதிருந்தே அவருடன் நெருக்கமான நட்பு ஏற்பட்டது. தீவிரமான அந்த அரசியல் நடவடிக்கைக் காலத்தில் பல்வேறு இடங்களிலே சந்திப்பதோடு, பொதுவிலும் எப்போதும் சந்திப்போம். சுவாரஸ்யமான பேச்சுக்களோடு, அவருடனான பொழுதுகள் இனியவை.

'வீரகேசரி'யில் அலுவலக நிருபராக இணைந்த சிறிது காலத்திலேயே தமிழ் பத்திரிகைத் துறையில் தன்னுடைய பெயரை நிலைநாட்டிக்கொண்டவர், 1981இல் ஆங்கில தினசரியான 'தி ஐலண்ட்' பத்திரிகையில் இணைந்தார். வார இதழ் 'சன்டே ஐலண்ட்'டில் அவரின் 'கிடுகு திரைக்குப் பின்னால்' **(Behind the Cudjan Curtain)** என்ற வாராந்த பத்தி, அவரை இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் தமிழ் வாசக பரப்புக்கு அப்பால், பத்திரிகை உலகில் அவரை அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர் இலங்கை அரசியல் விவகாரங்களிலான ஒரு தமிழ் பத்திரிகையாளராக அவர் ஒரு பரவலான அங்கீகாரத்தைப் பெற்றார். சென்னை 'இந்து' பத்திரிகையின் நிருபராகவுமிருந்தார்.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலைகொண்டிருந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் பிரதி தலைவர் மாத்தையாவை (கோபாலசாமி மகேந்திரராஜா) செவ்வி கண்டு எழுதினார். அது இலங்கை - இந்திய அரசுகளிடையே ஏற்படுத்திய நெருக்கடியின் விளைவாக டி. பி. எஸ். ஜெயராஜ் கைதுசெய்யப்பட்டு, புலனாய்வுப் பிரிவின் பிரசித்திபெற்ற நான்காம் மாடியில் விசாரணைக்குள்ளானார். அப்போது, இந்திய தூதராகவிருந்த டி. என். டிக்ஸிற்றின் வற்புறுத்தலில் ஜனாதிபதி ஜயவர்த்தன இந் நடவடிக்கையை மேற்கொண்டதாக பொதுவாகவே பேசப்பட்டது. 'இந்து' பத்திரிகையின் ராம் மற்றும் வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் எழுப்பிய ஆட்சேபணையில் ஜெயராஜ் பின்னர் விடுதலையானார்.

கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் அனுசரணையுடன் ஹவார்ட் பல்கலைக்கழகத்துக்கு தோழமைப் பயணம் சென்றவர் அங்கிருந்து கனடா சென்று, பின்னர் கனடாவையே தனது வதிவிடமாக்கிக்கொண்டார். இதில் உள்ள ஆச்சரியம் என்னவெனில், இலங்கையில் நிகழ்ந்த யுத்த நெருக்கடி காலத்தை வெளிக்கொணர்ந்தவர்களில் மிக முக்கியமான ஒருவராக எல்லா தரப்பினராலும் கொண்டாடப்படும் ஜெயராஜ், பல்லாயிரம் மைல்கள் தொலைப் பார்வையில்தான் அனைத்தையும் கண்டார். இப் புலம்பெயர் வாழ்வே அவருக்கு சாதகமாகியது. அப்படி அவர் அதனைச் சாதகமாக்க, அவர் ஏற்படுத்திக் கொண்ட பிரமிப்பான அபார தொடர்பு வலைப்பின்னல் துணையாகியது.

ஆளும் அரசு, எதிர்க்கட்சி, பாதுகாப்புப்படை, மாற்று இயக்கங்கள், தூதரகங்கள், பத்திரிகைகள் என்று அனைத்து தரப்பிலுமே அவர் தொடர்புகளை வைத்திருந்தார். ஒவ்வொருவருடனும் நம்பிக்கைக்குரிய பழகுதலை வலுவாக்கினார்.

டிபிஎஸ் இடையிடையே தொலைபேசியில் பேசுவார் மணித்தியாலங்களாக பேசுவார். காத்திரமான அலசல் அதில் இழையோடும். நீண்ட காலமாக தமிழில் எழுதுவதை அவர் பெரும்பாலும் நிறுத்திவிட்டபோது, லண்டனில் வெளிவந்த 'அஞ்சல்' வார இதழில் தொடராக அவரின் பக்கம் ஒன்றை அவர் எழுதவைத்தேன். மன விருப்போடு எழுதினார். அரசியலோடு அவரின் அலாதி ஈடுபாடான தமிழ் சினிமா, மற்றும் கலாசார அம்சங்களிலும் எழுதினார். அப்போது, பத்திரிகைக்கு இலேசான ஒரு 'சாயம்' வாசக வட்டத்தில் பூசப்படுவதும் தெரிந்தது.

டிபிஎஸ்ஸின் எழுத்துக்களில் விஞ்சித் தெரியும் விவரண சித்தரிப்பு, சிலசமயங்களில் நம்பிக்கைத்தன்மையை வலுப்படுத்தும் அவரின் எண்ணமாகவும் தெரியும். யாழ்ப்பாணத்தில் 'ஈழநாடு' ஸ்தாபகர் கே. சி. தங்கராசா இணைந்து ஆரம்பித்த 'சற்றடே றிவியூ' பத்திரிகையிலும் ஜெயராஜ் சிறிதுகாலம் துணை ஆசிரியராகவிருந்தார்.

கனடாவில் வாழ்ந்த வேளையில் ஜெயராஜ் கார் தரிப்பிடமொன்றில் தாக்குதலுக்குள்ளாகி, அவரின் இரண்டு கால்களும் காயப்படுத்தப்பட்டமும் நிகழ்ந்தது.

வழக்கம்போல, கடைசியாக கடந்த ஆண்டு கனடா சென்றிருந்த வேளையிலும் அவரை அவரது இல்லத்தில் சந்தித்தேன். அப்போது, பார்த்தமாத்திரத்தில் அவரின் தோற்றம் சற்று துணுக்குற வைத்தது. ஆனாலும், அப்படியொன்றும் இல்லாததுபோலவே ஜெயராஜ் தன்னைக் காண்பித்தார்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஜெயராஜ் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக மூச்சுவிடாது எழுதினார். 'உண்மைகள் புனிதமானவை' என்ற வேதத்தை அவரால் எந்த அளவுக்கு புனிதப்படுத்த முடிந்ததோ ஆனால், அவருடைய சிந்தையில் புனிதம் இருந்தது. "என்ன மாலி, எல்லாம் இப்படியாய்ப் போயிற்றே" என்று, நான் புறப்படும்போது கொட்டிய அந்த பத்திரிகையாளனின் விரக்தி, நிச்சயமாக புனிதமானது.

டி. பி. எஸ். ஜெயராஜின் **dbsjeyaraj.com** இணையத்தளம், தோற்றுப்போன ஒரு வரலாற்றின் ஓர் ஆவண காப்பகமாக நிலைக்கும்.

# பேச்சுவார்த்தையே தீர்வு!

எஸ். சிறிதுரை

பிரச்னைகள் தீர்வதற்கு உரிய யோசனையைக் குழந்தை சொன்னாலும் கேட்க வேண்டும். அல்லது ஒரு கிளியே சொன்னாலும் கேட்க வேண்டும்.


ஒரு குடும்பத்தில் தம்பதி இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, அதுவே சண்டையாக உருமாறி கணவர் தனது கையை ஓங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். அச்சமயம் வீட்டிலிருக்கும் அந்தத் தம்பதியின் குழந்தை பயத்தில் நடுநடுங்கி "அம்மாவை அடிக்காதீங்கப்பா!" என்று கூறுவது இயல்புதானே!

அந்தக் குழந்தையின் வேண்டுகோளை உடனடியாக ஏற்றுக்கொண்டு பெற்றோர் இருவரும் சமாதானப் பாதைக்குத் திரும்பினால் உடனடியாக அந்தக் குடும்பத்தில் அமைதி திரும்பும்.

அதற்கு மாறாக, குழந்தையின் வார்த்தையை அலட்சியம் செய்து அதன் பெற்றோர் சண்டையைத் தொடர்ந்தால், அந்தக் குடும்பத்தில் இயல்பு நிலை திரும்புவதற்கு நாள்கள் பலவாகும்.

இதோ இன்னொரு சூழ்நிலையைக் கற்பனை செய்து பார்ப்போம். மலைவாசஸ்தலம் ஒன்றில் வசிப்பவரின் குடிசை வீட்டின் அருகில் பள்ளத்தாக்கு உள்ளது. அந்த மலைப் பாதையில் நடந்து வருபவர்கள் இதை அறியாமல் அந்தக் குடிசையைத் தாண்டிச் சென்றால் அந்தப் பள்ளத்தாக்கில் விழுந்துவிடக் கூடும். இதைத் தடுப்பதற்கு அந்த மலைவாசி ஓர் ஏற்பாட்டை செய்தார்.

தமது வீட்டு வாசலில் தொங்கும் கூடு ஒன்றில் வைத்து வளர்த்து வரும் கிளியிடம் "அந்தப்பக்கம் போகாதே!" என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்.



நாளடைவில் அந்தக் கிளியும் அவ்விதமே கூறப் பழகி விட்டது. அந்த வீட்டின் முன்னுள்ள பாதை வழியே யார் சென்றாலும், "அந்தப் பக்கம் போகாதே!, அந்தப் பக்கம் போகாதே!" என்று அந்தக் கிளி குரல் கொடுக்கத் தொடங்கியது.

அந்தக் குரலைக் கேட்டவுடன் வந்த வழியே திரும்பிச் சென்றவர்கள் உயிர் பிழைத்தனர். "அட, இந்தக் கிளி சொல்வதை நாம் கேட்பதா?" என்று நினைத்து மேலும் சில அடிதொலைவு நடந்து சென்றவர்கள் மலைப்பள்ளத்தாக்கில் விழுந்து மாண்டனர்.

மேற்கண்ட விளக்கங்களுக்கும் இன்றைய உலக நடப்புகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பது உண்மையிலும் உண்மை. இவ்வுலக நாடுகளுள் வளர்ச்சி கண்டுள்ள வல்லரசு நாடுகளும் உள்ளன. மேலும், வல்லரசாக வளரத் துடிக்கும் நாடுகளும், பொருளாதார பலத்தை மட்டும் கொண்டுள்ள நாடுகளும், படைபலத்தை மட்டும் பெருக்கிவரும் நாடுகளும் உள்ளன. இயற்கைவளம்,

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காசா நோக்கிய குளோபல் சுமுத் கப்பல் வழிமறிப்பு:

# இஸ்ரேலிய கடல் முற்றுகைக்கு சர்வதேச கண்டனம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

காசா மீது நீடித்து வரும் போரின் பின்னணியில், மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்ல முயன்ற "குளோபல் சுமுத்" (Global Sumud) கப்பலை இஸ்ரேலிய கடற்படை சர்வதேச கடற்பரப்பில் வழிமறித்து, அதிலிருந்த நானூறுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்களை கைது செய்த சம்பவம் உலகளாவிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் பதினொரு அவுஸ்திரேலியர்கள் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள், மருத்துவர்கள், மாணவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச கடற்பரப்பில் "குளோபல் சுமுத்" கப்பல் காசா நோக்கி செல்கையில் இஸ்ரேல் கடற்படையால் வழிமறிப்பு செய்யப்பட்டது. மனிதாபிமானப் போராட்டத்தை தடுத்து இஸ்ரேல் கடற்படை அதிகாரத் துஷ்பிரயோகம் செய்துள்ளது என்று மனித உரிமைகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இந்த சம்பவம் ஒரு சாதாரண கடற்படை நடவடிக்கையாக மட்டும் பார்க்கபடவில்லை. மாறாக, இது சர்வதேச சட்டம், மனித உரிமைகள், கடல் சுதந்திரம் மற்றும் காசா முற்றுகை ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதிய உலகளாவிய விவாதமாக மாறியுள்ளது.

### "குளோபல் சுமுத்" உதவிக் கப்பல்:

"சுமுத்" என்பது அரபு மொழியில் "உறுதியான நிலைத்தன்மை" அல்லது "முடிவற்ற எதிர்ப்பு" என்பதைக் குறிக்கும் சொல். காசா மக்களுக்கு உணவு, மருந்து மற்றும் அவசர மனிதாபிமானப் பொருட்களை கொண்டு செல்லும் நோக்கில் இந்தக் கப்பல் பயணித்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஆனால் இஸ்ரேல், இந்தக் கப்பல் காசா கடற்படை முற்றுகையை மீற முயன்றதாகவும், பாதுகாப்பு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தக்கூடிய பொருட்கள் கப்பலில் இருந்ததாகவும் குற்றஞ்சாட்டியது. சட்டவிரோதப் பொருட்கள் கண்டறியப்பட்டதாக இஸ்ரேல் கூறினாலும், அதற்கான தெளிவான ஆதாரங்கள் பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை.

இதனால் பலர், மனிதாபிமான உதவிகளைத் தடுக்க பாதுகாப்பு என்ற காரணம் பயன்படுத்தப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்புகின்றனர். அத்துடன் சர்வதேச கடற்பரப்பில் தாக்குதல் சட்ட ரீதியான சர்ச்சையை இஸ்ரேல் ஏற்படுத்தி கொண்டுள்ளது.



இந்த சம்பவத்தின் மிக முக்கியமான அம்சம், இந்த வழிமறிப்பு சர்வதேச கடற்பரப்பில் நடைபெற்றதாகும். கடல்சார் சர்வதேச சட்டங்களின்படி, எந்த நாடும் தனது எல்லைக்கு வெளியே இயங்கும் கப்பல்களை வழிமறிக்கத் தகுந்த சட்ட அடிப்படை தேவைப்படுகிறது.

ஆனாலும் இஸ்ரேல், காசா மீது விதித்துள்ள கடற்படை முற்றுகை சட்டபூர்வமானது என்றும், அந்த முற்றுகையை மீற முயன்ற எந்தக் கப்பலையும் தடுக்க உரிமையுள்ளதாகவும் வாதிடுகிறது. ஆனால் மனித உரிமை அமைப்புகள் மற்றும் பல சர்வதேச சட்ட நிபுணர்கள், காசா முற்றுகையே மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரானது என்பதால், அதனை அமல்படுத்தும் நடவடிக்கைகளும் கேள்விக்குறியாகின்றன என்று வலியுறுத்துகின்றனர்.

இந்தச் சம்பவம் **2010**ஆம் ஆண்டு காசாவை நோக்கிச் சென்ற "மாவி மர்மரா" கப்பல் மீதான இஸ்ரேலிய தாக்குதலை மீண்டும் நினைவூட்டியுள்ளது. அப்போது சர்வதேச கண்டனம் மிகப்பெரிய அளவில் எழுந்திருந்தது.

### உலகக் கண்டனமும், கைதானோர் நிலை ?

அதேவேளை இந்த கப்பலில் கைது செய்யப்பட்ட தன்னார்வ ஆர்வலர்கள் இஸ்ரேலிய துறைமுகங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், அவர்கள் இழிவாக நடத்தப்பட்டதாகவும், பல மணி நேர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின. சிலர் மருத்துவ உதவியின்றி வைக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, ஸ்பெயின், அயர்லாந்து உள்ளிட்ட பல நாடுகள் இந்தச் சம்பவம் குறித்து கவலை வெளியிட்டன. சில அரசுகள், தங்களது குடிமக்களை உடனடியாக விடுவிக்க வேண்டுமென இஸ்ரேலிடம் கோரிக்கை வைத்துள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை வட்டாரங்களிலும் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை தேவைப்படுவதாகக் கருத்துகள் எழுந்துள்ளன. குறிப்பாக, மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்லும் முயற்சிகள் இராணுவ அடக்குமுறையால் தடுக்கப்படுவது உலகளாவிய சட்ட ஒழுங்குக்கு ஆபத்தான முன்னுதாரணம் என விமர்சகர்கள் கூறுகின்றனர்.




**மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்லும் முயற்சிகள் இராணுவ அடக்குமுறையால் தடுக்கப்படுவது உலகளாவிய சட்ட ஒழுங்குக்கு ஆபத்தானது என அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். இந்த சம்பவம் ஒரு சாதாரண கடற்படை நடவடிக்கையாக மட்டும் பார்க்கப்படவில்லை. மாறாக, இது சர்வதேச சட்டம், மனித உரிமைகள், கடல் சுதந்திரம் மற்றும் காசா முற்றுகை ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதிய உலகளாவிய விவாதமாக மாறியுள்ளது.**




### காசா போரும் உலக மனநிலையும்

காசா போர் தொடங்கியதிலிருந்து உலக மக்களிடையே பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு அதிகரித்துள்ளது. மாணவர் போராட்டங்கள், தொழிற்சங்க எதிர்ப்புகள், துறைமுக மறியல்கள் மற்றும் மனிதாபிமான உதவி முயற்சிகள் உலகம் முழுவதும் அதிகரித்து வருகின்றன.

"குளோபல் சுமுத்" கப்பல் அதே சர்வதேச ஒற்றுமையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. ஆயுதங்களுடன் அல்லாமல், மருந்துகளும் உணவுகளும் கொண்டு சென்றதாகக் கூறப்படும் ஒரு கப்பல் இராணுவத்தால் தடுக்கப்படுவது, காசா நிலைமை குறித்து உலக மனநிலையை மேலும் மாற்றக்கூடும்.

இஸ்ரேல் தனது தேசிய பாதுகாப்பை முன்னிறுத்துகிறது. ஆனால் அதே நேரத்தில், காசா மக்களின் மனிதாபிமான நெருக்கடி உலக மனச்சாட்சியைத் தட்டிக் கேட்கிறது. இந்த இரண்டு நிலைகளின் மோதலே "குளோபல் சுமுத்" சம்பவத்தின் மையமாக உள்ளது.

ஒரு பக்கம் பாதுகாப்பு என்ற அரசியல் மொழி மறுபக்கம் மனிதாபிமானம் என்ற உலக குடிமக்கள் குரல். இந்த இரண்டிற்கும் இடையே உருவாகும் பதற்றம், எதிர்கால சர்வதேச உறவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். "குளோபல் சுமுத்" கப்பல் வழிமறிப்பு சம்பவம் ஒரு தனிப்பட்ட கடற்படை நடவடிக்கை அல்ல. அது காசா முற்றுகை, சர்வதேச சட்டம், மனித உரிமைகள் மற்றும் உலக அரசியல் இரட்டை நிலைப்பாடுகள் பற்றிய ஆழமான கேள்விகளை எழுப்புகிறது.


### இத்தாலி - ஆஸி அரசு கண்டனம்

காசாவிற்கான மனிதாபிமான உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பலில் இருந்த சர்வதேச தொண்டர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களை இஸ்ரேல் கைது செய்த சம்பவத்திற்கு எதிராக அவுஸ்திரேலியா இத்தாலி மற்றும் பல நாடுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன. இந்தச் சம்பவம் மத்திய கிழக்கில் ஏற்கனவே தீவிரமடைந்துள்ள அரசியல் மற்றும் மனிதாபிமான பதற்றத்தை மேலும் உயர்த்தியுள்ளது.

இத்தாலி அரசாங்கத்தின் வெளியுறவுத்துறை அதிகாரிகள், சர்வதேச கடல் சட்டங்களையும் மனிதாபிமான உதவி தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்களையும் மதிக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ளனர். உதவிப் பொருட்களுடன் பயணம் செய்த பொதுமக்கள் மற்றும் தொண்டர்களை கைது செய்வது ஏற்றுக்கொள்ள முடியாத நடவடிக்கையாகும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காசா மக்களுக்கு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்ல முயன்ற இந்தக் கப்பல், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை செயற்பாட்டாளர்களின் ஆதரவுடன் இயக்கப்பட்டது. ஆனால், இஸ்ரேல் கடற்படை அந்தக் கப்பலை தடுத்து நிறுத்தி அதிலிருந்தவர்களை கைது செய்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நடவடிக்கை உலகளாவிய மனித உரிமை அமைப்புகள் மத்தியில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இத்தாலியில் உள்ள பல அரசியல் கட்சிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள், காசாவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடியை உலக நாடுகள் உணர வேண்டும் என்றும், உதவிகளைத் தடுக்காமல் அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளன. குறிப்பாக, குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் கடுமையான உணவுக் குறைபாடு மற்றும் மருத்துவ நெருக்கடியை எதிர்கொண்டு வரும் நிலையில், உதவிக் கப்பல்களை தடுக்குவது மனிதநேயத்திற்கே எதிரானது என அவர்கள் கூறுகின்றனர்.



இந்தச் சம்பவம், காசா தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுக்குள் உருவாகி வரும் புதிய அரசியல் மனோபாவத்தையும் வெளிப்படுத்துகிறது. கடந்த சில மாதங்களாக, பல ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கைகள் மற்றும் காசா முற்றுகை குறித்து அதிகமாக விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. இத்தாலியின் இந்தக் கண்டனமும் அதே வரிசையில் முக்கியமான அரசியல் சைகையாக பார்க்கப்படுகிறது.

மத்திய கிழக்கில் நீடித்து வரும் மோதல்கள் உலக அரசியலையும், சர்வதேச மனித உரிமை விவாதங்களையும் தீவிரமாக பாதித்து வருகின்றன. காசா மக்களுக்கு உதவ முயன்ற தொண்டர்களின் கைது சம்பவம், மனிதாபிமான உதவிகள் கூட அரசியல் மற்றும் ராணுவ கட்டுப்பாடுகளின் கீழ் சிக்கிக் கொண்டுள்ளன என்பதை மீண்டும் உலகுக்கு நினைவூட்டியுள்ளது.

மனிதாபிமான உதவியைத் தடுக்கிறோமா அல்லது பாதுகாப்பை உறுதிப்படுத்துகிறோமா என்ற விவாதம் தொடரலாம். ஆனால் ஒரு உண்மை மட்டும் தெளிவாகிறது: காசா பிரச்சினை இனி ஒரு பிராந்தியப் போராக மட்டும் இல்லை அது உலக மனச்சாட்சியை சோதிக்கும் மனிதநேயப் பிரச்சினையாக மாறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## முதல்வர் விஜய்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

“மேயர் வைக்க வேண்டாமென்று மறுத்துள்ளதால் இப்போதைக்கு அங்கு வைக்கவில்லை. இதுதொடர்பாக என்ன விதிகள் உள்ளன என்பது பற்றி ஆய்வு செய்து வருகிறோம். அதைப் பார்த்த பின்பே அடுத்த என்ன செய்வது என்பது பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.” என்றார்.

கோவை மேயரைப் போலவே, மாநகராட்சி யிலுள்ள சில மண்டலத் தலைவர்களும், நிலைக் குழுத் தலைவர்களும் தங்களுடைய அறைகளில் முதல்வர் விஜய் படத்தை வைக்க அனுமதிக்க வில்லை என்றும் தெரியவந்துள்ளது. அதுபற்றி அவர்களில் சிலரிடம் பேசியபோதும் அவர்களும் அதை ஒப்புக்கொண்டனர்.

பிபிசியிடம் பேசிய கோவை மாநகராட்சியின் முன்னாள் மேயரும், அதிமுகவைச் சேர்ந்த முன் னாள் அமைச்சருமான செ.ம.வேலுசாமி, “அரசிய லில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மேயருக்கு மாநகராட்சி நிர்வாகத்தால் ஒதுக்கப்ப ட்டுள்ள அறையில், பொறுப்பிலுள்ள முதல்வர் படத்தை வைக்க அனுமதிப்பதே முறை. அதை மறுப்பதற்கு மேயருக்கு தனிப்பட்ட முறையில் உரிமையோ, அதிகாரமோ இருப்பதாக நான் கருதவில்லை. அதை வைப்பதற்கு அனுமதிப்பதில் ஒரு பிரச்னையுமில்லை.” என்றார்.

இதேபோன்று சென்னை மாநகராட்சியிலும் அரசுக்கும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளுக் கும் இடையிலான சூழல் விவாதப் பொருளாகியு ள்ளது.

தமிழக முதல்வராக விஜய் பொறுப்பேற்று, 10 நாட்களுக்கு மேலாகியும் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் அவரைப் பார்க்கவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

அதை மறுத்துள்ள மேயர், தனக்கு காலில் காயம் என்பதால் பார்க்கவில்லை என்று ஊடக ங்களில் கூறியுள்ளார்.

மேயரின் நடவடிக்கையை சென்னையிலுள்ள “வாய்ஸ் ஒவ் பீப்பிள்” அமைப்பு கண்டித்துள்ளது.

எக்ஸ் தளத்தில் அந்த அமைப்பு வெளியிட் டுள்ள பதிவில், “அரசியல் கருத்து வேறுபாடுகளால் உள்ளாட்சிகளின் செயல்பாடு பாதிக்கக் கூடாது. மாநகராட்சி மன்றத்திற்கு இன்னும் சுமார் ஓராண்டு பதவிக்காலம் உள்ள நிலையில், நிர்வாகத்தை திறம்பட நடத்துவதற்கு மாநில அரசு, மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடையே ஆக்கப் பூர்வமான ஒருங்கிணைப்பு அவசியம்.” என்று தெரிவித்துள்ளது.

பிபிசியிடம் பேசிய வாய்ஸ் ஒவ் பீப்பிள் அமைப்பின் நிர்வாகி சாரு கோவிந்தன், “மாநில அரசும், மாநகராட்சி மன்றமும் இணைந்து செயல்படாவிட்டால் பாதிக்கப்படப்போவது மக்கள்தான். கோடையின் தாக்கம் இப்போது மிக அதிகமாகவுள்ளது. மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அரசுடன் இணைந்து மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகள் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. அடுத்து மழைக்காலம் துவங்கும் போது, இந்த ஒருங்கிணைப்பு இன்னும் அதிகமாகத் தேவைப்படும். இதில் அரசியல் பார்க்கக்கூடாது.” என்றார்.

பெருமழைக்காலங்களில் அரசும், மாநகராட்சி மன்றமும் இணைந்து செயல்படாவிட்டால் ஏற்படப் போகும் பாதிப்பு குறித்து அவர் விளக்கினார்.

சாலை, மழைநீர் வடிகால் பராமரிப்பு, தெரு விளக்கு, குடிநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை, தூய்மைப்பணி, பொது சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் செய்ய வேண்டிய பொறுப்பிலுள்ள மாநகராட்சி நிர்வாகமும், மக்கள் பிரதிநிதிகளும் மாநில அரசுடன் இணைந்து பணிகளை மேற்கொண்டால்தான் பேரிடர்களை எதிர்கொள்ள முடியுமென்றும் பலரும் கருத்துக் கூறியுள்ளனர்.

“சென்னை மேயர் பிரியா ராஜன், முதல்வரை சந்திக்க வேண்டும். அவர் கூறியுள்ள காரணம் ஏற்கத்தக்கதல்ல. குறைந்தபட்சம் ஒரு வாழ்த்தை யாவது அவருடைய அலுவலகம் வெளியிட்டிருக் கலாம்.” என்றாார் சாரு.

சென்னை மேயர் பிரியா ராஜனிடம் இதுபற்றி பி.பி.சி. தமிழ் பேசியது. அதற்கு பதிலளித்த அவர், “ஏற்கெனவே இதற்கான காரணத்தை நிர்வாக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் நான் விளக்கியிருக்கிறேன். தேர்தல் முடிவு வரும் முன்பே எனக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. முழுமையாக ஒரு மாதம் ஓய்வில் இருந்தால்தான் விரைவாக குணமாகும் என்று மருத்துவர்கள் கூறியிருப்பதால் நான் எங்குமே வெளியில் செல்லவில்லை. கையில் காயமாயிருந்தால் பரவாயில்லை. காலில் காயம் என்பதால் நடமாட முடியவில்லை.““ என்றார்.

(நன்றி-பிபிசி தமிழ்)

## பேச்சுவார்த்தையே...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார பலம் இல்லாத நாடுகளும் உள்ளன. இவை அனைத்துக்கும் மத்தியில் நடுவே வல்லரசுப் பட்டத்துக்கு வெகு அருகில் வந்துவிட்ட இந்தியாவும் உள்ளது.

ராணுவ வலிமை, இயற்கைவளம், மனிதவளம், உள்கட்டமைப்பு, ராக்கெட் தொழில்நுட்பம் போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கும் இந்தியா ராணுவத் தளவாடங்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளதுடன், அவற்றைப் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறது.

இப்படிப்பட்ட நிலையிலும், இந்தியா வேறு எந்த நாட்டுடனும் வலிய சண்டைக்குச் செல்லாததுடன், நாடுகளுக்கிடையிலான பிரச்னைகளுக்குப் பேச்சுவார்த்தையே சிறந்த வழி என்பதைத் தனது நிரந்தரக் கொள்கை யாகக் கொண்டிருக்கிறது.

உக்ரைன்- ரஷ்யா, ஈரான்-இஸ்ரேல், பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான், தாய்லாந்து-கம்போடியா, சீனா-தைவான், வடகொரியா-தென்கொரியா ஆகிய எந்த இரண்டு நாடுகளுக்கிடையிலான சச்சரவுகளுக்கும் போர் தீர்வாகாது என்பதுடன், அந்த நாடுகள் தங்களுக் கிடையிலான பிரச்னைகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலமாகவே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இந்தியா தொடர்ந்து கூறிவருகிறது.

தற்போது அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவை இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்த, ஈரானோ இஸ்ரேல் மட்டுமின்றி அமெரிக்கப் படைகளுக்கு இடமளித்த வளைகுடா நாடுகள் மீதும் தாக்குதல் நடத்தியது.

ஈரானின் உச்ச தலைவர் மட்டுமின்றி, அந்நாட்டின் முக்கியஸ்தர்கள் பலருடன் பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ள அதே நேரம், ஈரானின் தாக்குதலால் வளைகுடா நாடுகள், இஸ்ரேல் ஆகியவற்றில் உள்ள உள்கட்டமைப்புகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. மேலும், இந்த நாடுகளில் உள்ள பெட்ரோலிய பொருள்கள் உற்பத்தி, சுத்திகரிப்பு, சேமிப்பு ஆகிய கட்டமைப்புகளும் பெரும் சேதமடைந்துள்ளன. ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல வேண்டிய வணிகக் கப்பல்களும் முடக்கப்பட்டுள்ளன.

இவற்றின் விளைவாக, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் ஆகியவை போன்றவற்றின் விநியோகம் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. ஈரான் மட்டுமின்றி, வளைகுடா நாடுகள், இஸ்ரேல் ஆகியவையும் பெரும் பொருளாதாரச் சீரழிவைச் சந்தித்திருக்கின்றன. மேலும், அந்த நாடுகளின் குடிமக்கள் மட்டுமின்றி, அவற்றில் பணிபுரிந்துவந்த இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கானவர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்தப் போருக்கு முதல்காரணமாக விளங்குகிற அமெரிக்காவும் தனது வீரர்கள் சிலரையும், போர் விமானங்கள், படைக்கலன்கள் உள்ளிட்டவற்றையும் இழந்துள்ளது. வருங்காலத்தில் அந்த நாடும் பொருளாதார இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

மேற்கண்ட நாடுகள் அனைத்தும் இந்தியா போன்ற நாடுகளின் வார்த்தைகளைக் கருத்தில் கொண்டு பரஸ்பரம் போர் தொடுப்பதற்குப் பதிலாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தால் கடந்த பத்தாண்டுகளில் இவ்வுலகம் எதிர்கொண்ட பேரழிவுகளைத் தவிர்த்திருக்கலாம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

அழிவை மட்டுமே அளிக்கிற போரைப் புரிவதற்கு அவசரப்படுவதைவிடவும், அமைதியையும், ஆக்கத்தையும் பரிசாக அளிக்கிற சமாதானத்துக்காகப் பொறுமையுடன் காத்திருப்பது மேலானதல்லவா? (தினமணி)

## கவனம் சிதறினால் வாழ்க்கை...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

100 மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என்று முயற்சிப்ப தில்லை. கடந்த 15 ஆண்டுகளில் பார்க்கும்போது சமீபத் திய இரண்டு ஆண்டுகளில் மாணவர்களின் இத்தகைய மனநிலை அதிர்ச்சி அளிக்கிறது. இது கற்றலில் பின்தங் கிய மாணவர்களின் நிலை அல்ல. இங்கு குறிப்பிடப்படு வது கவனத்திறன் குறைந்த மாணவ மாணவிகளை. இவர் கள் நிச்சயம் 80 மதிப்பெண்களுக்கு மேல் பெறும் தகுதி பெற்றவர்கள். ஆனால், அதற்காக அவர்கள் முயற்சிப்ப தில்லை. 60 மதிப்பெண்கள் எடுத்தாலே போதும் என்று தங்களுக்குள்ளாகவே சட்டம் வகுத்து கொண்ட வர்கள்.

கூகுள், மெட்டா, டிக் டாக் போன்ற நிறுவனங்களின் முதன்மைப் பொருள் நீங்களோ, நானோ அல்ல, நம் கவனம்தான். “முடிவில்லா சுருள்” எனும் தானியங்கி ஓட்டம், அறிவிப்பு (நோட்டிபிகேஷன்) புள்ளிகள் எல்லாம் நம்மை கைப்பேசியுடன் அடிமைச் சங்கிலிபோல பிணைக்க வடிவமைக்கப்பட்ட உளவியல் பொறிகள். நாம் இவற்றையெல்லாம் இலவசமாகப் பயன்படுத்துகிறோம் என்று நினைக்கிறோம். ஆனால், உண்மையில் நம் கவனத்தை விற்றுக் கொண்டிருக்கிறோம்.

வாட்ஸ்-ஆப் அரட்டையுடனேயே பாடம் படிப்பது, சாப்பிடும்போது காதொலிப்பானில் (ஹெட்போனில்) கேட்பது, பேசும்போது இன்ஸ்டாகிராமில் தொடர்வது என ஒரே நேரத்தில் பல வேலைகள் செய்வதை திறமை என நினைக்கிறோம். ஆனால், பல்பணி (மல்டி டாஸ்கிங்) செய்பவர்களின் மூளை ஒரு வேலையில் இருந்து இன்னொன்றுக்குத் தாவ 40 சதவீதம் அதிக நேரம் எடுத்துக் கொள்வதாக ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஆய்வு தெரிவிக்கிறது. இதனால், செய்யக்கூடிய வேலைகளில் தவறுகள் 50 சதவீதம் அதிகரிக்கின்றன.

இப்படி கவனம் சிதறும் போது பதற்றம் கூடுகிறது. ஒரு வேலையையும் முழுமையாக முடிக்காத குற்ற உணர்வு மேலோங்கும். இதனால், தேவையற்ற பயம், தூக்கமின்மை எல்லாம் பக்கவிளைவாக நாளடைவில் வந்து சேரும்.

நம் முன்னோர் மணிக்கணக்கில் ஒரு வேலையில் ஆழ்ந்து ஈடுபட்டனர். ஆனால், இன்று நம்மால் எட்டு விநாடிகள்கூட ஒரு விஷயத்தில் முழுமையாகக் கவனம் செலுத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

நாளைய தலைமுறையான இன்றைய பிள்ளைகளை வளர்ப்பதில் ஒவ்வொரு பெற்றோரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. லட்சுமண ரேகை போல ஒரு எல்லைக்கோட்டை வகுக்க வேண்டியது அவசியம். உணவருந்தும் போது கைப்பேசியைத் தவிர்ப்பது, தேவையில்லாத அறிவிப்பு (நோட்டிஃபிகேஷன்) ஒலியை நீக்குவது அவசியம். எடுத்துக்கொண்ட வேலையில் 25 நிமிஷம் ஆழ்ந்து பணி செய்துவிட்டு ஐந்து நிமிஷம் கிடைக்கும் ஓய்வில் கைப்பேசியை கையாளச் சொல்லி முதலில் பழக்கி, பின்னர் 25 நிமிஷங்களை 45 நிமிஷமாக உயர்த்தும் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

இதுவே கவனத்துக்கான பயிற்சி. ஆரம்பத்தில் மனம் அலைபாயும். மீண்டும் இழுத்து வர வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமை. பள்ளிகளிலும் முதல் ஐந்து நிமிஷத்தில் மூச்சுப் பயிற்சி, கவனம் குவித்தல் போன்ற பயிற்சி கொடுக்கலாம். பிரெஞ்சு தத்துவ ஞானி சிமோன் வெயில், “கவனம்தான் பிரார்த்தனையின் அரிய வடிவம்” என்று சொன்னார். நம் கவனத்தை யாருக்கு, எதற்குக் கொடுக்கிறோம் என்பதே நம் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. ஒவ்வொருவரும் சுய பரிசோதனை செய்ய வேண்டிய தருணம் இது. கவனம் சிதறினால் வாழ்க்கை சிதறும். ●

## மே மாதம்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜே.ஆரும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை - அதே போன்று பிரபாகரனும் புரிந்துகொள்ளவில்லை. அன்று இந்தியா வழங்கிய வாய்ப்பை பயன்படுத் தியிருந்தால், இலங்கையின் உள்நாட்டு யுத்தம் சில நூறு உயிரிழப்புக்களோடு முடிவுற்றிருக்கும், ஈழத் தமிழர்கள் இந்தளவு பெரிய விலையொன்றை கொடுத்து, அரசியல் கையறு நிலைக்குச் சென்றிருக்கும் நிலைமையும் ஏற்பட்டிருக்காது. இந்தியாவை விரோதித்து தனிநாட்டை அடைய முடியுமென்னும் கற்பனைதான் ராஜீவ் கொலையாக உருமாறியது. ராஜீவ்காந்தி மீண்டும் தேர்தலில் வெற்றிபெற்றால், அவர் மீண்டும் இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பு விடுவார் என்னும் புரிதலிலேயே அந்த விசப்பரிட்சை நிகழ்ந்தது. ஏற்கனவே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா தமிழ் நாட்டில் வைத்து கொல்லப்பட்டமையானது, ராஜீவ் காந்தி கொலைக்கான ஒத்திகையாகியது. 1991 மே 21இல், விதைக்கப்பட்டது 2009 மே மாதத்தில் அறுவடையானது.

## முன்னோக்கி நகர்வதற்கான...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டுள்ளதுடன் கணிசமான பொதுமக்களின் நல்லெண்ணத்தையும் பெற்றுள்ளது. இது தைரியமான தலைமைத்துவத்திற்கான இடத்தை உருவாக்குகிறது.

எனவே, அரசாங்கமும் எதிர்க்கட்சிகள் மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சிகளும் தங்களின் கசப்பான அரசியல் பூசல்களை ஒதுக்கி வைத்துவிட்டு, அரசியலமைப்பிற்குள் உட்பொதிக்கப்பட்ட ஒருமித்த அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு ஒருவருக்கொருவர் நேர்மையுடன் ஈடுபட வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இலங்கை இராணுவ வெற்றி, மத்தியமயமாக்கப்பட்ட ஆட்சி மற்றும் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட அணுகுமுறைகளை முயற்சித்துப் பார்த்து விட்டது. இவை எதுவும் தனித்து இன மோதலுக்குத் தீர்வு காணவில்லை. இனவாதம் இல்லாத தன்மையும் பொருளாதார அபிவிருத்தியும் அவசியமானவை என்பதே கடந்த காலத்தின் பாடமாகும். ஆனால், அவை மட்டுமே போதுமானவை அல்ல. இலங்கையில் நிலையான அமைதிக்கு அதிகாரப் பகிர்வு, பரஸ்பர நம்பிக்கை கட்டியெழுப்புதல் மற்றும் அனைத்து சமூகங்களும் தாங்கள் அனைவரும் வாழும் நாட்டைத் தங்கள் சொந்த இல்லமாக உணரும் பற்றுணர்வை வழங்கும் ஓர் அரசியல் தீர்வு ஆகியவை அவசியமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வீதி விதிமுறை...

மோட்டார் சைக்கிள்களில் பயணித்த நபர்களின் படங்கள் மற்றும் காணொளிகள் சமூக ஊடகங்களில் பரவியதைத் தொடர்ந்து, புலனாய்வுப் பிரிவினரைக் கொண்டு நடத்தப்பட்ட தேடுதலில் இந்த சந்தேக நபர்கள் புத்தூர் சந்தியிலிருந்து கொடிகாமம் ஊடாக கிளிநொச்சி நோக்கிப் பயணித்துள்ளமை கண்டறியப் பட்டது.

இதன் முதற் கட்டமாக, தலைக்கவசம் இன்றி பயணித்த ஒரு மோட்டார் சைக்கிள் பதிவு இலக்கத்தின் அடிப்படையில் கடந்த மே 19 ஆம் திகதி கிளிநொச்சி, தேரக்கன்கட்டு பகுதிக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் அதிகாரிகள், அதன் உரிமையாளரைக் கண்டுபிடித்து விசாரணை நடத்தினர்.

இதன்போது, கடந்த 18 ஆம் திகதி விசுவமடு சந்தியில் ஒன்று கூடிய மோட்டார் சைக்கிள் ஓட்டிகள், முல்லைத்தீவு வீதி வழியாக வெள்ளமுள்ளிவாய்க்கால் நோக்கிப் பயணித்துள்ளமை தெரியவந்ததை அடுத்து, முல்லைத்தீவு பொலிஸ் பிரிவினர் நடத்திய விரிவான விசாரணைகளின் மூலம் இந்த மூவரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அத்துடன், பயங்கரவாதத் தடை சட்ட விதிகளின் கீழும் பல்வேறு பாதுகாப்புப் பிரிவினர் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சமூக ஊடகங்களில் பரவிய படங்களைச் சுட்டிக்காட்டி சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுமாறு பொலிஸாருக்கு தகவல் வழங்கிய சட்டத்தை மதிக்கும் குடிமக்களின் விழிப்புணர்வை தாங்கள் பெரிதும் பாராட்டுவதாக இலங்கைக் காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள நபர்கள் சதித்திட்டங்களின் அடிப்படையில் குற்றமிழைத்துள்ளனரா என்பதை நீதிமன்றத்தின் முன் சான்றாதாரங்களுடன் நிரூபிப்பதற்கான முறையான விசாரணைகள் நுணுக்கமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் குறிப்பிட்டுள்ளது. (அ)

## நாட்டின் தேசிய...

ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டொலர் மற்றும் யூரோவின் மதிப்பு உயர்வதைக் காரணம் காட்டி நாட்டைத் துண்டு துண்டாக விற்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எமக்குத் தேவை வெளிநாட்டுத் தலைவர்கள் அல்ல, இந்த மண்ணின் பாரம்பரியத்தை உணர்ந்த தலைவர்களேயாகும்.

தற்போது சமூக ஊடகங்கள் மூலம் திட்டமிட்ட முறையில் பௌத்த சாசனத்துக்கும், தேரர்களுக்கும் மற்றும் கலாசாரத்துக்கும் எதிராக நற்பெயர் களங்கப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பௌத்தத்தின் உன்னத விழாக்களான வெசாக் மற்றும் பொசொன் பண்டிகைகளின் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்கும், எமது புத்தாண்டு சுப நேரங்களைக் குழப்புவதற்கும் சில தரப்பினர் முயற்சிக்கின்றனர். இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முன்னால் மகா சங்கத்தினரும் பௌத்த மக்களும் மௌனமாக இருக்கக் கூடாது-என்றார். (அ)

## ஜனாதிபதியுடன்...

குறித்து கலந்துரையாடுவதற்கு உடனடியாக சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டவேண்டும் என்றும், அது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதிக்கு நேரில் அறிவிக்கவேண்டும் என்றும் இக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது.

அந்த இணக்கப்பாட்டின்படி, நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியைத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு இந்தத் திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

இதன்போது பதிலளித்துள்ள ஜனாதிபதி, தான் தற்போது மட்டக்களப்பில் தங்கியிருப்பதாகவும், கொழும்பு திரும்பியதும் இது தொடர்பில் இறுதிப் பதிலைத் தெரிவிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அறியப்படுத்தியுள்ளார். (அ)

## பொருளாதார...

ஒன்று நடைபெற்றது.

இதன்போது, தற்போதைய பொருளாதாரச் சூழல் மற்றும் நிதி ஸ்திரத்தன்மை குறித்து பாராளுமன்றத்தில் அவசரமாக விவாதிக்கப்படவேண்டும் என்ற முன்மொழிவை எதிர்க்கட்சித் தலைவர்கள் சபாநாயகரிடம் உத்தியோகபூர்வமாக முன்வைத்தனர்.

இச்சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அப்பதிவில் அவர் தெரிவிக்கையில்,

"இலங்கை ரூபாய் தற்போது கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளது. நிலவும் இந்தச் சூழலை எதிர்கொள்வதற்கான தெளிவான பதில்களோ அல்லது திட்டங்களோ அரசிடம் இல்லை.

இன்று ஏனைய கட்சித் தலைவர்களுடன் இணைந்து சபாநாயகரைச் சந்தித்து, நிலவி வரும் பொருளாதார நெருக்கடி குறித்து அவசர பாராளுமன்ற விவாதம் ஒன்றை நடத்துமாறு கோரினோம்.

நிலைமை மேலும் மோசமடைவதற்கு முன்னர், மக்களுக்கு நேர்மையான மற்றும் உடனடித் தீர்வுகள் தேவைப்படுகின்றன." என பதிவிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு மற்றும் ரூபாய் மீதான நாணய அழுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தாக்கங்கள் குறித்து இந்த விவாதத்தின் போது விரிவாக ஆராய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ள நிலையில், சபாநாயகரின் உத்தியோகபூர்வ பதில் அடுத்த சில தினங்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## 13ஆவது திருத்தத்தை..

தொடர்பாக கலந்துரையாட எதிர்க்கட்சித் தலைவரும் கனடா தூதுவரும் கொழும்பில் சந்தித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான கனடா தூதுவரான இசபெல் கெத்தரின் மார்ட்டினுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனநாயக ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் நீடித்த இன நல்லிணக்கம் தொடர்பாகவும் இரு தரப்பினரும் இங்கு கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதோடு, இச்சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மாகாண சபை தேர்தல்களை நடத்துவது ஜனநாயகத்தின் இன்றியமையாத அங்கமாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான தனது உறுதியான அரசியல் அர்ப்பணிப்பை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தினார்.

இந்த இருதரப்பு சந்திப்பின்போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தூதுவர் இசபெல் மார்ட்டினும் இலங்கை எதிர்கொள்ளும் பேரண்டப் பொருளாதார சவால்கள் குறித்தும், டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவுக்கு பின்னர் நாட்டை பாதித்த சமூக பொருளாதார சவால்கள் தொடர்பிலும் இங்கு விரிவாக கலந்துரையாடினர்.

இலங்கையில் தற்சமயத்தில் தாக்கத்திற்குள்ளான மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு துரித நிவாரணம், மறுசீரமைப்பு மற்றும் வாழ்வாதார மீட்சிக்கு முன்னுரிமை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், நாடாக மீண்டும் தலை நிமிர்வதற்கும், சேதமடைந்த சொத்துக்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும் உலகளாவிய ரீதியாக உதவிகள் கிடைக்க வேண்டும் என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சர்வதேச நாணய நிதியத்திடம் தான் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாகவும் மீண்டும் இங்கு சுட்டிக்காட்டினார்.

அவ்வாறே, கனடாவின் வலுவான காலநிலை, நிதி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, காலநிலை- ஸ்மார்ட்- கமத்தொழிலை வலுப்படுத்துதல், நிலைபேறான காணி பயன்பாடு மற்றும் நீரேந்து முகாமைத்துவத்தை மேம்படுத்தல் மற்றும் இலங்கையில் மிகவும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய வறண்ட காலநிலையைக் கொண்ட புவியியல் பகுதி முழுவதும் (உலர் வலயம்) இருக்கும் பெண் விவசாயிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கனேடிய டொலர் 5 மில்லியன் வேலைத்திட்டமான "ஆக்ஸஸ் சிறீலங்கா" திட்டத்தை பாராட்டினார். (அ)

## வெளிவிவகார...

நிகோல் சூலிக் மற்றும் தூதரக விவகாரங்களுக்கான பொறுப்பாளர் ஜேன் ஹொவெல் ஆகியோர் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் விரிவுபடுத்துவதுடன், பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்புத் தன்மையைப் பேணுவதில் இருதரப்பும் இணைந்து செயல்படக்கூடிய வழிமுறைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், இருதரப்பு மேம்பட்ட ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள், பொருளாதாரக் கூட்டாண்மை மற்றும் பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

## நான் திங்கள்...

தொகுப்பாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

"நான் கீழே விழுந்தது போர்வீரர்கள் நினைவிடத்துக்கு முன்னால். அங்கு விழுந்ததில் எனக்கு எந்த அவமானமும் இல்லை. ஆனால், இந்த அரசாங்கம் புலம்பெயர் அமைப்புகளின் காலடியில் விழுந்து கிடக்கிறது.

அப்படி விழுந்தால்தான் நாம் வெட்கப்படவேண்டும். எனது அரசியல் வாழ்க்கையில் நான் ஒருபோதும் நாடகமாடியதில்லை. போர்வீரர்கள் நினைவிடம் என்பது ஒரு பொது இடம், அங்கு யார் வேண்டுமானாலும் சென்று அஞ்சலி செலுத்தலாம். அதைத் தடுக்க நினைப்பது சட்டத்திற்குப் புறம்பானது"- என்றார்.

அங்கிருந்த வெள்ளை நிற சிறிய சுவரில் தனது கால் தட்டியதால் சமநிலை தவறி விழுந்ததாகவும், கைகளால் அதைத் தடுத்துக்கொண்டதால் முகத்தில் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும், தான் மதுபோதையில் இருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை என்றும் அவர் மறுத்தார்.

"நான் சட்டத்தை மீறியிருந்தால் அங்கேயே நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், தற்போது என்னையும் எங்கள் கட்சியின் மற்றொரு உறுப்பினரையும் திங்கட்கிழமை தலங்கம பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைத்துள்ளனர். எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி, அன்று அவர்கள் எங்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த திட்டமிட்டுள்ளனர். நாங்கள் அதற்குத் தயாராகவே இருக்கிறோம்" எனக் குறிப்பிட்டார். (அ)

## நாட்டில் தொடரும்...

கம்பஹா - திவுலப்பிட்டிய பிரதேசத்தில் 64 வயதுடைய ஒருவர் வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளதாக அந்த மத்திய நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்காக தற்போது 17 தற்காலிக நலன்புரி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 351 குடும்பங்களைச் சேர்ந்த 1,192 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நிலவி வரும் சீரற்ற வானிலையால் 2 வீடுகள் முழுமையாகவும், 807 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## இம்முறை மீண்டும்...

கைப்பற்றுவதாகக் கூறுவது ஜனநாயகம் மற்றும் அடிப்படை உரிமைகளை அழிக்கும் ஒரு சர்வாதிகார முயற்சியாகும் என ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இலங்கையின் 54ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த முறையைப் போல இந்த முறையும் நாடு பொருளாதார ரீதியாக வீழ்ந்தால் அதிலிருந்து மீள்வது எளிதல்ல. கடந்த முறை நமக்கு உதவி செய்ய பல நாடுகள் இருந்தன. ஆனால், இம்முறை வீழ்ந்தால் மீண்டும் எழும் நம்பிக்கையை வைக்க முடியாது. எனவே, நாட்டின் மீது பற்றுள்ள அனைவருக்கும் வீழ்ச்சியடையப் போகும் இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் காணப்பட்டதைப் போன்று இலங்கையிலும் இரண்டு பலமான அரசியல் கட்சிகள் இருந்தன. ஆனால் நம் நாட்டில் அவ்வப்போது இருந்த தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் உடைத்து பலவீனப்படுத்தினார்கள். அதன் விளைவை இன்று ஒட்டுமொத்த நாடும் அனுபவிக்கிறது-என்றார். (அ)

## எந்த முறையாயினும்...

சிக்கல்கள் குறித்த விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர். நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத்தேர்தல்கள் தொடர்பான விவகாரங்களை ஆராய்வதற்காக, அமைச்சர் விஜித ஹேரத்தின் தலைமையில் அண்மையில் இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய தேர்தல் கட்டமைப்பு குறித்து ஆராய்ந்து, அதற்கான பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கும் அதிகாரம் இந்தத் தெரிவுக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

2.5 மில்லியன் டொலர் நிதி மோசடி;

# சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்துக்கு பதில் இல்லை!

கொழும்பு, மே. 24

திறைசேரியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மோசடி தொடர்பாக முறையான பாராளுமன்ற விசாரணை நடத்தக் கோரி சபாநாயகருக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இதுவரை பதில் வழங்கப்படவில்லை என சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ சுற்றறிக்கைகள் மற்றும் நடைமுறைகளை மீறி சபாநாயகர் மௌனம் காத்துவருவது, சம்பவத்துடன் தொடர்புடைய ஆதாரங்கள் அழிக்கப்படவோ அல்லது மறைக்கப்படவோ வாய்ப்பளிப்பதாக சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் மைத்ரி குணரத்ன கையொப்பமிட்ட விசேட கடிதமொன்றின் மூலம் இந்த குற்றச்சாட்டுகள் மீண்டும் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான முதலாவது கடிதம் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்த போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை சுதந்திர சட்டத்தரணிகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# மூளைக் காய்ச்சல் தீவிரம்!

கொழும்பு, மே. 24

தெனியாய பகுதியில் உள்ள சில பாடசாலைகளில் பதிவாகியிருந்த மூளைக்காய்ச்சல் நோய், தற்போது நாட்டின் மேலும் பல பகுதிகளுக்கும் பரவியுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் பாலித கருணாபேம தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதன்படி, தியத்தலாவ பகுதியில் 28 நோயாளர்களும் வெலிமடை பகுதியில் 13 நோயாளர்களும் ரிகில்லகஸ்கட பகுதியில் 25 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் பாலித கருணாபேம தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே அதிக காய்ச்சல், தலைவலி மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகளுடன் இது பரவினாலும், நோய் குறித்து பொதுமக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அவர் தெரிவித்தார்.

இந்த அறிகுறிகள் பொதுவாக 5 முதல் 7 நாட்கள் வரை நீடிக்கும் என்றும், முறையான மருத்துவ சிகிச்சையின் மூலம் நோயாளர்கள் குணமடைந்து வருவதோடு, நிலைமையைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். (அ)

# உயிர்த்த ஞாயிறு விசாரணை தீவிரம் உண்மையை மறைக்க நாமல் முயற்சி!

## பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 24

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தற்போது மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த காலங்களில் அதிகாரத்தைக் கைப்பற்ற மக்களின் உயிர்களுடன் விளையாடிய அரசியல்வாதிகள் இப்போது சட்டத்திற்குப் பயந்து நடுங்கத் தொடங்கியுள்ளதாக தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாமல் தரப்பு சட்டத்தரணிகள் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் மிகவும் அவசரமாகக் கேள்வி எழுப்பினார்கள். “சஹ்ரானின் வாக்குமூலம் எங்கே என்று அவர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

ஆனால், இப்போது அந்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அதைப் பற்றிப் பேசாமல் சம்பந்தமில்லாத வெற்றுக்கதைகளை கூறிவருகின்றனர். அவர்கள் செய்த குற்றங்களுக்காக இப்போது சட்டம் அவர்களைத் துரத்திக் கொண்டு பின்னால் வருகிறது. இதனால்தான் அவர்கள் தற்போது பெரும் பதற்றமடைந்துள்ளார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் எங்கே? வேகம் போதவில்லை, இன்னும் ஒன்றும் நடக்கவில்லையே என்று அவர்கள் எள்ளி நகையாடினார்கள். ஆனால், தற்போது விசாரணைகள் மிகச் சரியான பாதையில் வேகமெடுத்துள்ளன.

முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சாலே என்பவர் மாத்திரம் இந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி அல்ல. சுரேஷ் சாலே போன்றவர்களைக் கொண்டு 270க்கும் மேற்பட்ட அப்பாவி கத்தோலிக்கப் பக்தர்களைக் கொன்று, மேலும் 500 இற்கும் அதிகமானோரை அங்கவீனமடைய செய்ய அவருக்கு என்ன தனிப்பட்ட தேவை இருக்கப் போகிறது?

இதன் பின்னணியில் ஒரு பாரிய அரசியல் கரம் இருந்தது. பிணங்களின் மீது ஏறி நின்று அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற அந்தப் பேராசைதான் இதன் பின்னணியில் இருந்தது.

அப்படிப்பட்ட கொடூரங்களைச் செய்த “கனவான்கள்” தான் இன்று சமூக ஊடகமான “எக்ஸ்” தளத்தில் பதிவுகளை இட்டு, “பொதுமக்களின் பணத்தைச் செலவழித்து பிரான்சுக்குச் சென்று விசாரணை நடத்துவதன் தேவை என்ன?” என்று நம்மிடம் கேள்வி எழுப்புகிறார்கள்.

பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று சர்வதேச ரீதியில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எவ்வளவு பொதுப்பணம் செலவானாலும் சரி, எவ்வித தயக்கமுமின்றி அதனைச் செலவு செய்து, இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரிகளை நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்துவதுதான் தற்போதைய அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும்.

அதனை நிறைவேற்றுவதில் இந்த அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது என்ற உறுதியை நாம் மக்களுக்கு வழங்குகிறோம்.

இதுவரைக் காலம் நீங்கள் இந்த நாட்டு மக்களின் பொதுச் சொத்துக்களுடனும், அப்பாவி மக்களின் உயிர்களுடனும் விளையாடினீர்கள். இனிமேலும் இந்த நாட்டில் அவ்வாறுக்கு ஒருபோதும் இடமில்லை என்பதை மிகத் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன் - என்றார். (அ)

# 9 வருடங்களுக்கு பின் கத்தோலிக்க திருச்சபை - அரசு இடையே சந்திப்பு

கொழும்பு, மே. 24

ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் கத்தோலிக்க திருச்சபைக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான உத்தியோகபூர்வ கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட கத்தோலிக்க பாடசாலைகளில் நிலவும் நிர்வாகப் பிரச்னைகள் மற்றும் கல்வி அமைச்சின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான புதிய பொறிமுறையொன்றை தயாரிப்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கத்தோலிக்க மதத்தைப் போதிப்பதற்கான ஆசிரியர் பணியாடல் முறைமையொன்றை உருவாக்குவது குறித்தும், ஆசிரியர் சேவைக்காக கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் அருட்சகோதரிகளை இணைத்துக்கொள்வதன் அவசியம் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டதாக அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கத்தோலிக்க திருச்சபையுடனான இத்தகைய கலந்துரையாடல்களை வருடத்துக்கு மூன்று முறை நடத்துவதற்கும், இதற்கான செயலாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகேயை நியமிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட ஆயர்கள் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் மதகுருமார்கள் பலர் கலந்துகொண்டனர்.

எவ்வித பாகுபாடுமின்றி அனைத்து மாணவர்களுக்கும் தத்தமது மதத்தைக் கற்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதும், கல்வித்துறையில் நிலவும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதுமே தனது எதிர்பார்ப்பு என கர்தினால் மல்கம் ரஞ்சித் இங்கு மேலும் வலியுறுத்தியதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கைக்கு எவ்.பி.ஐ.யின் விசாரணை குழு வரவில்லை

## தவறான தகவல் என அமெரிக்கா மறுப்பு

கொழும்பு, மே. 24

இலங்கையில் இடம்பெற்று வரும் விசாரணைகளுக்கு ஆதரவளிக்க அமெரிக்க கூட்டாட்சி புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ.யின் விசேட “குழு” ஒன்று இலங்கைக்கு வந்துள்ளதாக வெளியாகியிருந்த தகவல்கள் தவறானவை என கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், அத்தகைய எந்த வொரு எவ்.பி.ஐ. விசாரணைக் குழுவும் இலங்கைக்கு அனுப்பப்பட வில்லை எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பல நாடுகளில் நடைமுறையில் உள்ள ஒத்துழைப்பு முறைகளைப் போலவே, இலங்கையிலும் அமெரிக்க தூதரகத்தின் கீழ் எவ்.பி.ஐ. சட்ட அதிகாரி ஒருவர் பணியாற்றி வருவதாகவும், அவர் தேவையான சந்தர்ப்பங்களில் இலங்கை சட்ட அமுலாக்க அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விசாரணைகள் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் துல்லியமான தகவல்களை வெளியிடுவது மிகவும் முக்கியமானது என்றும், தவறான தகவல்கள் பொதுமக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அமெரிக்க தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் சில ஊடகங்களில் மற்றும் சமூக ஊடக தளங்களில், இலங்கையில் இடம்பெற்று வரும் விசாரணைகளுக்காக அமெரிக்க எவ்.பி.ஐ. குழு நேரடியாக வந்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த பின்னணியிலேயே இந்த விளக்க அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org